AMUTHANATHI

# அமுதநதி

எண்ணுவதுயர்வு...

ISSN : 2602-8832


கலை, இலக்கிய, சமூக காலாண்டிதழ்

நதி: 02 கிளை: 04 ஏப்ரல் - ஜூன். 2018

100/-




- தொடர்பாடலின் ஆறு அடிப்படைகள்
- வளர்ந்தோர் கற்றல்
- பரோடா ஜீப்பும் பழைய சைக்கிளும்
- நிஜமுகம்
- ஏழாவது ஊழி
- சிந்தனை செய் மனமே
- ஈழம் தந்த கொடை
- மல்லிகைத் தோட்டம்



கவிஞர் நாவண்ணன் அவர்களின் சிறப்புக் கட்டுரை



பி.ஏ.சி.ஆனந்தராஜா

# வடக்கில் மல்லிகை!

## மதுரை மல்லிகை செயற்றிட்டம்


## தம்பா மாதிரிப் பண்ணை











**மல்லிகைப்பூக்களின் தொடர்புகளுக்கு...**

## Thampa Tourist Hotel

Sinnaputhukkulam, Vavuniya.

Tel: 024 5670262 / 077 7183963

www.thampahotel / info@thampahotel.com



## இதழ் ஒரு குறள்

அதிகாரம் : இல்வாழ்க்கை
குறள் : 050

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

**பொருள் :** உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான்.


அமுதநதி

ஆசிரியர்
**திருமதி. அ. நெலோமி**

ஆலோசகர்கள்
**திரு. அ. அன்ரனி குரூஸ்**
**திரு. ந. பார்த்தீபன்**

வெளியீடு
**வன்னியூர்க் கவிராயர் கலை இலக்கியப் பேரவை**

அச்சுப் பதிப்பு
**விஜய் அச்சுப் பதிப்பகம்**
172, மில் வீதி, வவுனியா.
077 900 9491 / 024 222 5799



தொடர்புகளுக்கு

**வன்னியூர்க் கவிராயர் கலை இலக்கியப் பேரவை**
இலுப்பைக்குளம், நேரியகுளம்.

**விரிவுரையாளர் விடுதி**
**இல: 07,**
**வ/தேசிய கல்வியியற் கல்லூரி,**
**பூந்தோட்டம், வவுனியா.**

077 2640202
071 6958230
077 6231859

Gmail amuthanathy@gmail.com
முகநூல்: Facebook/அமுதநதி



இச்சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்

விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரித்தாவார்கள்


## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து...

அமுதநதி தனது நான்காவது காலாண்டிதழை வெளியிட்டு ஒரு வருட நிறைவை எய்தியுள்ளது.

இவ்வேளையில் தமது பங்களிப்பை தொடர்ந்தும் நல்கிக் கொண்டிருக்கும் படைப்பாளிகள், மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்முறை சித்திரைப் புத்தாண்டுடன் ஆரம்பமாகும் இக்காலாண்டு பல்வேறு உலக தினங்களையும் நினைவு படுத்துகின்றது. தொழிலாளர் தினம், அன்னையர் தினம், குழந்தைகள் தினம், சுற்றுச் சூழல் தினம், போதை ஒழிப்புத் தினம், நீரிழிவாளர் தினம் ஏழைகள் தினம், உலக மக்கள் தொகை தினம், என்று ஏராளமான தினங்கள். வருடத்தில் ஒரு முறை மட்டும் வந்து போகும் இத்தினங்கள் எமக்கு சொல்லிப் போகும் செய்திகள் என்ன? எந்த விடயம் தொடர்பாக மனித குலத்திற்கு விழிப்புணர்வு குறைவாக இருக்கிறதோ எது தொடர்பாக மேம்படுத்தலை ஏற்படுத்த வேண்டுமோ, எது தொடர்பாக நன்றியுணர்வுடன் இருக்க வேண்டுமோ அவை தொடர்பாக சுட்டிக்காட்டும் தினங்களாகும்.

அன்றைய தினத்தில் மட்டும் அதைப்பற்றிப் பேசிவிட்டு செய்திகளாகக் கூறிவிட்டு மௌனிக்க வேண்டிய விடயங்களல்ல.


K.BHARANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
...niaham, Alvai.

வாழ்நாள் முழுவதிலும் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய விடயம் இது பற்றி சிந்திப்போம். மாறுவோம்.

பிறக்கப்போகும் சித்திரைப் புத்தாண்டு அனைவருக்கும் நன்மைகளை அள்ளித்தர வேண்டும் என்று மனதார வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கின்றோம்.

நன்றி

- ஆசிரியர்

## பொருளடக்கம்


(03) தொடர்பாடலின் ஆறு அடிப்படைகள்
(08) மாணவர் பக்கம்
(09) மூளைக்கு வேலை
(10) பரோட்டா ஜீப்பும் பழைய சைக்கிளும்
(21) நூல் அறிமுகம் (ஏழாவது ஊழி)
(24) சிந்தனை செய் மனமே
(26) கவிதை மழை
(30) பொறுக்கியின் பொறுக்கல்
(31) நிஜமுகம்
(36) ஈழம் தந்த கொடை (கவிஞர் நாவண்ணன்)
(40) தொழிலாளர் தினம்
(41) சேதன விவசாயம்
(46) அதிர்ச்சி தரும் ஆய்வு முடிவுகள்
(48) மனதை மயக்கும் மல்லிகைத் தோட்டம்
(52) வளர்ந்தோர் கற்றல்
(55) முற்றத்து மல்லிகை
(58) அன்னையர் தினம்



தனிப்பிரதி: 100/-

ஒரு வருட சந்தா : 400/-
(தபாற்செலவு உள்ளடங்கலாக)


சந்தா வைப்புகளுக்கு...
திருமதி.அ.நெலோமி
கணக்கிலக்கம்: 8760988
இலங்கை வங்கி
வவுனியா கிளை

சஞ்சிகை கிடைக்க வேண்டிய முகவரியையும் பணம் வைப்பிலிட்ட ரசீதினையும் எமது வழமையான முகவரிக்கு அல்லது அமுதநதி முகநூல் உள்பெட்டிக்கு அனுப்பிவையுங்கள்.

# தொடர்பாடலின் ஆறு அடிப்படைகள்

க. சுவர்ணராஜா

தொடர்பாடல் என்பது வெறுமனே மற்றவர்களுக்குத் தகவல்களை வழங்குதல் அல்லது மற்றவர்களிடமிருந்து தகவல்களை, விபரங்களைப் பெறுதல் என்பனவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல. தொடர்பு கொள்ளல் என்பது உறவுகளின் சங்கமம், பரஸ்பர புரிந்துணர்வு, பல்வேறு எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.




தொடர்பாடல் பற்றி ஒரு உளவியலாளர் பின்வருமாறு கூறுகின்றார். "தொடர்பாடல் என்பது இரண்டு தனிமங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பிரிக்க முடியாத கூட்டுப்பொருளை உருவாக்கும் இரசாயன விளைவைப் போன்றது" என்பதாகும்.

மேற்கண்ட தொடர்பாடல் பற்றிய கூற்றானது தொடர்பாடல் என்பது நமது தேவைகளையும், எமது இலக்குகளையும் அடைவதற்கான ஒரு முக்கிய கருவி. அது எமது வாழ்வின் ஒரு முக்கிய பங்கினைப் பெற்றுக் கொள்வதொன்று என்பதனையும் உணர்த்தி நிற்கின்றது.

ஒரு மனிதனின் தொடர்பாடல் முறையானது அவனது உள்மன ஆற்றல்களையும் தன்னம்பிக்கையையும் பிரதிபலிக்கின்றது எனலாம். ஒரு மனிதன் கொண்டுள்ள தொடர்பாடல் திறன்களே பெருமளவில் அவரது சாதனைகளின் அடிப்படைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. அத்துடன் ஒரு மனிதனின் தொடர்பாடல் முறையானது அவரது பணி, பதவி உயர்வு, பொறுப்புக்களைக் கையாளல், நட்பு வட்டம், கற்றல், ஆதரவைப் பெறுதல், புற ஊக்குவிப்பினைப் பெறல், என்பனவற்றிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


சிறப்பான தொடர்பாடல் ஆறு அடிப்படைகளின் கீழ் கட்டியெழுப்பப்படுகின்றது. அவை பின்வருமாறு அமைகின்றது.




தொடர்பாடலை எப்படி ஆரம்பிக்கின்றோம் என்பதே தொடர்பாடலின் விளைவைத் தீர்மானிக்கின்றது.

K. PIRAPANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
Kalaiaham, Alvai.

மனிதனின் சகல நடத்தைகளும் தொடர்பாடல் ஆகும்



ஒரு செய்தியை வழங்கப்படும் முறையானது செய்தியை பெற்றுக் கொள்ளும் முறையின் மீது பாதிப்புச் செலுத்துகின்றது

உண்மையான தொடர்பாடல் என்பது சென்றடைந்த தகவலே தவிர. அனுப்ப விரும்பிய தகவல் அல்ல

தொடர்பாடல் இருவழிப்பாதை. தகவல் வழங்கப்படவும் வேண்டும். அதுபோல் தகவலை சேகரிக்கவும் வேண்டும்

தொடர்பாடல் என்பது ஒரு பரஸ்பர செயற்பாடு ஆகும்.

**தொடர்பாடலை எப்படி ஆரம்பிக்கின்றோம் என்பதே தொடர்பாடலின் விளைவைத் தீர்மானிக்கின்றது.**

ஒரு தொடர்பாடல் செய்முறையானது எப்போதும் சிறப்பாக ஆரம்பிக்கப்படல் வேண்டும். தொடர்பாடலில் செய்திக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றதோ அந்தளவு முக்கியத்துவம் தொடர்பாடலை ஆரம்பிக்கும் சூழ்நிலைக்கும் வழங்கப்படல் வேண்டும்.

ஒரு செய்தியை வழங்குபவர் அச்செய்தியை வழங்கும் ஆரம்ப நிலையில் திணறிவிட்டால். அல்லது குழப்பமடைந்து விட்டால். அல்லது ஆரம்ப வார்த்தைகளைத் தெளிவின்றித் தொடங்கினால் அந்நிலையானது தொடரும் தொடர்பாடலில் பொருத்தமற்ற விளைவுகளையே உருவாக்கும்.

தொடர்பாடலின் போது நமது முறை செயற்படு முன்னர் வாய் பேசத் தொடங்கினால் அது தொடர்பாடலின் விளைதிறனை குறைவடையச் செய்துவிடும். எப்படிப் பேசுதல் வேண்டும். எந்த சந்தர்ப்பத்தில் பேசுதல் வேண்டும். எவ்வெவ் தகவல்களை இணைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பவற்றைத் திட்டமிட்டுக் கொண்ட பிறகே தொடர்பாடலை ஆரம்பித்தல் வேண்டும். நமது செய்தியை பெறுபவர் தெளிவாக புரிந்துகொள்வதற்கு எப்படி செய்தியை வழங்கலாம், நம்மால் வழங்கப்படும் செய்தியை அவர் புரிந்துகொள்ள அவரை எப்படி ஊக்குவிக்கலாம் என்ற முன் திட்டமிடலுடனேயே தொடர்பாடல் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

**மனிதனின் சகல நடத்தைகளும் தொடர்பாடல் ஆகும்.**

ஒரு மனிதன் தன்னிடம் அடங்கியுள்ள எல்லா தகவல்களையும் வார்த்தைகளால் மட்டும் வெளிப்படுத்தி விட முடியாது. ஒரு தொடர்பாடல் சூழலில் ஒருவர் கொண்டுள்ள தகவல்களில் 7 வீதம் தொடக்கம் 30 வீதம் வரையிலான

விடயங்களே வார்த்தைகளாக வெளிவருகின்றன. ஆகவே வெறும் வார்த்தைகள் மட்டும் தொடர்பாடலாக அமைந்து விடமுடியாது.

ஒருவரின் குரல் தெளிவு, கண்களின் தொடர்பு, அவரது மெய்நிலை, அவர் அணிந்திருக்கும் ஆடைகள், அமர்ந்திருக்கும் முறை, எல்லாம் தொடர்பாடலின் போது கவனத்திற் கொள்ளப்படுகின்றன. செய்தியைப் பெறுபவர் செய்தியை வழங்குபவரின் மேற்கண்ட அம்சங்களை எல்லாம் கவனத்திற் கொண்டே தகவல்களை செவிமடுக்கின்றார்.

தொடர்பாடல் பற்றிய ஆய்வுகள் தொடர்பாடலின் தாக்கம் 55 % உடல்மொழி மற்றும் குறியீடுகளிலிருந்து வருவதாகவும் 38 % குரல் தொனி, வேகம், அளவு என்பவற்றிலிருந்து வருவதாகவும் வெறும் 7 % மட்டுமே ஒருவர் பயன்படுத்தும் வார்த்தைகளிலிருந்து வருவதாகவும் குறிப்பிடுகின்றன.

**ஒரு செய்தியை வழங்கப்படும் முறையானது செய்தியை பெற்றுக்கொள்ளும் முறையின் மீது பாதிப்புச் செலுத்துகின்றது.**

தொடர்பாடலில் ஒருவர் என்ன சொல்ல வருகின்றார் என்பதை விட அவர் அச் செய்தியை எப்படிச் சொல்ல வருகின்றார் என்பது அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

சிலர் தொடர்பாடலின்போது ஒரு தகவலை திருத்தமாக மற்றவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் தெரிவிக்க வேண்டும் என்பதில் அக்கறை செலுத்துவதில்லை. அதாவது, ஒரு தகவலை வெளியிடும் முறை பற்றி கவலைப்படுவதில்லை. தகவல்களை தெரிவித்து விட்டால் மட்டும் போதுமானது என்பதுடன் தமது அக்கறையை நிறுத்தி விடுகின்றனர். அத்துடன் அச் செய்தியை பெறுபவர்கள் அதனை துல்லியமாக உள்வாங்கிக் கொள்ளுதல் பற்றி கவலைப்படுவதில்லை. நன்கு புரிந்து கொள்வதற்கான முயற்சியை மேற்கொள்ளும் பொறுப்பை செய்தியை பெற்றுக் கொள்பவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.


சிறந்த தொடர்பாடல் என்பது செய்தியில் மட்டும் தங்கியிருப்பதில்லை. செய்தியை பெறுபவர், இலகுவாக, எளிதாக புரிந்து கொள்வதிலும் தங்கியுள்ளது.

**உண்மையான தொடர்பாடல் என்பது சென்றடைந்த தகவலே தவிர அனுப்ப விரும்பிய தகவல் அல்ல.**

தொடர்பாடலின்போது ஒருவர் பல விடயங்களை முன்வைக்க விரும்பினாலும், அவர் வழங்கிய தகவல்களிலிருந்து செய்தியை பெறுநர் பெற்றுக்கொண்ட தகவல்கள் மட்டுமே உண்மையான தொடர்பாடல் ஆகும்.

சில நேரங்களில் ஒருவர் சொல்ல விரும்பிய விடயங்கள் மற்றவர்களுக்கு பொருத்தமாக, சரியாக சென்றடையவில்லையே என கவலைப்படுவதுண்டு. உதாரணமாக ஒருவர் ஒரு தகவலை பத்து நபர்களுக்கு வழங்கப்பட

வேண்டியிருக்கலாம். இந்நிலையில் செய்தியைப் பெறவேண்டிய பத்து நபர்களினதும் புரிதல் திறன், அவர்களது பின்னணி, விருப்பங்கள் என்பன ஆளுக்கு ஆள் வேறுபட்டிருப்பதை புரிந்துகொள்ளாமல் பத்து பேருக்கும் ஒரே விதமாக தகவலை வழங்கினால் தொடர்பாடல் தோல்வியிலேயே முடிவடையும்.



தகவல்களை வழங்க முன்னர் தகவல்களைப் பெறுநர்களின் அனுபவ நிலை, உளநிலை, முன் ஆயத்த நிலை என்பவற்றை கண்டறிந்து கொண்ட பின்னரே தகவல்களை வழங்குதல் வேண்டும்.

தொடர்பாடல் இருவழிப்பாதை, தகவல் வழங்கப்படவும் வேண்டும், அதுபோல தகவலை சேகரிக்கவும் வேண்டும்.

தொடர்பாடல் என்பது இருவழிப்பாதையாகும். தொடர்ச்சியான பின்னூட்டலுடன் கூடிய தொடர்பாடல் செயன்முறையானது நல்ல தகவல்களை அளித்தல், நல்ல தகவல்களைப் பெறுதல், முன்னேற்றத்தைச் சாதித்தல் என்ற மூன்று முக்கிய பண்புகளைக் கொண்டதாகும்.

தொடர்பாடலில் ஒருவர் தமது கருத்தை மற்றவர்களை ஈர்க்கும் வகையில் தெளிவாக முன்வைத்து விட்டால் போதுமானதல்ல. இது பெறும் மேடைப்பேச்சு அல்லது மற்றவர்களின் மீது பழி சுமத்தும் வெற்றுரைகளுக்கு மட்டும் பொருத்தமானது. இது ஒரு வழிப்பாதை மட்டுமே.

உண்மையான தொடர்பாடல் தொடங்குவதற்கு முன்பதாகவே எதிர்த் தரப்பினரின் கருத்துக்களை தெளிவாக கேட்டறிய வேண்டும். இதன் மூலம் ஒருவர் தமது கருத்தினை வலுவுடன் எடுத்துக்கூற முடியும்.

தொடர்பாடல் பற்றிய ஒரு வழிப்பாதை மீது நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் தமது தகவல்களை வெளிப்படுத்தியவுடன் தொடர்பாடல் முடிவுக்கு வருவதாக கருதுகின்றனர்.

போதியளவு சிறப்பான தகவல்களை சேகரித்துக் கொண்டு தொடர்பாடலில் ஈடுபடல், தொடர்பாடலின் அடுத்த படிக்கு சிறப்பாக தயாராக முடியும்.

**தொடர்பாடல் என்பது பரஸ்பர செயற்பாடு.**

தொடர்பாடல் என்பது மனிதர்களுக்கு மத்தியிலும், மனங்களுக்கு இடையிலும் நடைபெறும் ஒரு குழுச் செயற்பாடு ஆகும். இன்னொருவருடன் இணைந்துதான் தொடர்பாடலை மேற்கொள்ள முடியும்.

உதாரணமாக இசையின் துடிப்பிற்கு ஏற்ப நளினத்துடன் நடனமாடும் ஒரு நிலையை தொடர்பாடலுடன் ஒப்பிடலாம்.

வெவ்வேறு மனிதர்களிடம் வெவ்வேறு நேரத்தில் ஒரே தகவலை கூறினால் கூட அது ஒவ்வொரு முறையும் வேறுபடும். ஏற்கனவே இடம்பெற்ற தொடர்பாடலிலிருந்து கற்றுக்கொள்வது தொடர்பாடல் வடிவங்களை மாற்றுதல், தொடர்பு கொள்ளும் போது ஏற்படும் மாறுபட்ட மனநிலைகள் என்பன பரஸ்பர தொடர்பாடலில் செல்வாக்குச் செலுத்துகின்றன.





வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் முகமாக...

ஒரே ஒரு SMS தருகின்றோம் 1000/- ரீலோட்

நீங்கள் செய்யவேண்டியது,

குறிஞ்சி மலர்

எனும் சொல் இச்சஞ்சிகையில் எந்த ஆக்கத்திலுள்ளது?
என்பதைக் கண்டுபிடித்து அவ்வாக்கத்தின் தலைப்பை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு உங்களுடைய பெயர், முகவரியுடன் குறுஞ்செய்தி அனுப்புங்கள்.

077 916 3679

குறித்த காலாண்டு வரைக்கும் SMS அனுப்பலாம், ஒருவர் ஒரு SMS மாத்திரமே அனுப்பமுடியும், காலாண்டின் இறுதியில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் ஐவரின் குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு 200 ரூபாய் பெறுமதியான ரீலோட் பரிசாக வழங்கப்படும்

பிரதான அனுசரணை: கூடிய தரம்! குறைந்த விலை!

VIJAY PRINTING PRESS

இல: 172, மில் வீதி, வவுனியா. 077 900 9491 / 024 222 5799


சென்ற இதழுக்கான சரியான விடையை அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யபட்டு தலா 200ரூபாய் ரீலோட்டை பரிசாகப் பெற்ற அதிர்ஷ்டசாலிகள்

- எஸ்.சதுஜன் ஓமந்தை
- ஏ.சஞ்சீவன் கணேசபுரம்
- பி.றிசாபிரவீன் வெளிக்குளம்
- ஆர்.தனுஜார்சினி கொழும்பு
- கே.மாரீஸ் நேரியகுளம்

சரியான விடை: "வெள்ளிக்கிழமை இரவுகள்"

# மாணவர் பக்கம்

## புத்தகம்

மூடிய பொக்கிஷம்
மூதாதையர் இருப்பிடம்
சொல்லித்தரும் ஆசிரியர்
சொல்லிலடங்கா புதிர்கள்

அருமை தெரியவில்லை
அற்பமாய் நினைக்கின்றனர்
திறந்தும் பார்ப்பதில்லை
தேவையின் போது தேடுகின்றனர்

உங்களில் ஒருவன் நான்
என்னிடம் வந்து மகிழுங்கள்
என்னிடம் உங்களின் எதிர்காலம்
வெற்றியில் செல்வீர் அறிஞராய்!

**தர்மி கிரிதரன்**
திருகோணமலை

## விழிப்படைவோம்

மூவினமே மூவினமே
விழிப்படைவோம்
ஒன்றுபட்டு எம் நாட்டை
எழுச்சியாக்குவோம்

சிங்களவர் தமிழர் முஸ்லீம்கள்
சேர்ந்து வாழும் ஒரு நாடு
எங்கள் நாடே
இனமே மூன்று தான்
இல்லை பகைமை தான்
ஐக்கியம் வளர
அறநெறி நிலைக்க
சமத்துவம் பேண விழிப்படைவோம்
இறைவனின் மக்கள் நாங்கள் என்று
நித்தமும் நினைத்து வாழ்ந்திடுவோம்.

**கே.ஜெயசோபி**
மட்டக்களப்பு

## அமுதநதி நெஞ்சங்கள்

வாசகர்களிடமிருந்து இன்னும் பல
கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.
உங்களுடைய கருத்துக்கள் ஒன்றே
அமுத நதியை பரந்து பலமனங்களையும்
சென்றடையச் செய்யும் என்பது திண்ணம்.
எமது வழமையான முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

ஆசிரியருக்கு...
அமுதநதி படித்தேன்.
மகிழ்ந்தேன். நன்று. தொடர்ந்தும்
படிப்பதற்கு ஆவலாக உள்ளேன்.
ஆகவே. சந்தா முறையில்
சேருவதற்கான விபரங்களைத்
தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**இ.அன்பழகன்**
இல:59, செபஸ்தியார் கோவில் வீதி,
மன்னார்.

# மூளைக்கு வேலை 3

**இடமிருந்து வலம்**

01. பாற்கடல் கடையப்பட்டது இதற்காகத்தானம்
05. இது யாரைதான் விட்டது
07. வேகம்
08. மனிதன் ஆலாய்ப் பறப்பது இதற்காகத்தானாம்
09. விம்மல்(குழம்பிவிட்டது)
12. கிராமிய நடனம் ஒன்று (குழம்பியுள்ளது)
14. கவிச்சக்கரவர்த்தி (திரும்பி விட்டார்)
16. பொருட் கொள்வனவில் இது முக்கியம் (குழம்பியுள்ளது)
17. கிராமிய கலைவடிவம் ஒன்று குறையாகி நிற்கிறது
18. ஒருவகைப்புல்
19. இறையன்பு திரும்பிவிட்டது
20. அழகு
21. சிறியோர் எல்லாம் பெரியோருக்கு இது ஆகின்றனர்

**மேலிருந்து கீழ்**

01. இதனால் அழிந்தோர் பலர்
02. அண்ணலும் அவளும் நோக்கியது இங்கேதான்
03. சுடச்சுட ஒளிர்வது
04. சம்மதம் (தலைகீழ்)
05. மாலை
06. அகிம்சைக்கு எதிரானது. (தலைகீழ்)
10. பாவம் செய்தோர் இது செய்தால் போதும் என நினைக்கின்றனர்
11. அபிமன்யுவின் தாய்
13. ஒரு தொடர்பாடல் ஊடகம். (குழம்பியுள்ளது)
14. வளைவு தலைகீழாகவும் மாறி விட்டது
15. அன்று தொடக்கம் இன்று வரை உள்ள வசூலிப்பு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| 9 | | 10 | | | | | |
| | | | | | 11 | | |
| 12 | 13 | | | 14 | | | 15 |
| 16 | | | | 17 | | | |
| | 18 | | | | 19 | | |
| 20 | | | | 21 | | | |

## மூளைக்கு வேலை 02 – விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ 1 | ம் 2 | மா 3 | | செ 4 | ரு 5 | க் 6 | கு 7 |
| ம் 8 | நா | த | | ல் 9 | வி | ய | டி |
| ப | | வு 10 | தை 11 | | பு 12 | த | |
| ல 13 | வ 14 | ம் | ய | | ப் 15 | க | பு 16 |
| ம் | ஞ் | | ல் | | | ம் | த் |
| | ச 17 | கா 18 | | ர் 19 | கா | | த |
| 20 | க | ம் | | யி | | ண் 21 | க |
| அ 22 | ம் | பு | | உ 23 | ரு | வ | ம் |

வெற்றியாளர்கள்:

1. எஸ்.சுமதா - ஓமந்தை
2. அ.செல்வராணி - வேப்பங்குளம்
3. அ.விபுலன் - பூந்தோட்டம்

சரியான விடைகளை, எமது வழமையான முகவரிக்கு அல்லது அமுதநதி முகநூல் உள்பெட்டிக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250/-, 150/-, 100/- வழங்கப்படும்

# பரோடா ஜீப்பும் பழைய சைக்கிளும்

ம.நிரேஸ்குமார்

த்றீ குவாட்டர் சோட்ஸ், ஆம் கட் வெனியன், கூலிங் கிளாஸ், விலையுயர்ந்த றிஸ்வோச், கழுத்தில் இரண்டு அல்லது மூன்று பவுண் செயின், ஒரு அங்குலம் வரை அகலம் இருக்கக் கூடிய கைச்செயின், இரண்டு கைகளிலுமாக நான்கைந்து மோதிரங்கள், கால்களில் இறப்பர் செருப்பு எனப் பார்ப்பதற்கு "வெளிநாட்டுத் தோற்றம்" அப்படியே தெரிந்தது.

தலை வாரத் தேவையில்லாத மொட்டந் தலையில் வியர்வைத் துளிகள் பள பளக்க, கையில் 2லீ குடி தண்ணீர் போத்தல், கண்ட கண்ட இடங்களில் குடிக்கின்ற தண்ணீர் ஒத்துக் கொள்ளாதாம். அதனால் வரும்போதே லக்கேஜ்ஜு"டன் நான்கைந்து டசின் குடி நீர்ப் போத்தல்களையும் கொண்டு வந்து விடுகிறார்கள்.



எனக்கு என்னவோ அவர்களைக் காண்கின்ற போதெல்லாம் "வட் இஸ் திஸ் கோணல் கோணல் காய்ஸ்?" கதைதான் ஞாபகத்திற்கு வரும்.

அவர்களின் வாழ்கைத் துணைவியைப் பார்த்தால் இன்னும் சிரிக்கத் தோன்றும் முழங்காலுக்கு மேலே நிற்குமளவு ரைட் ஸ்கேட் அல்லது சோட்ஸ், தொள தொள ரீ சேட், நெற்றியில் பெரும்பாலும் பொட்டிருக்காது. தட்டித் தவறி இருந்தாலும் ஒட்டுப் பொட்டுத்தான் இருக்கும். கணவன் அணிந்திருப்பதிலும் பார்க்க மிக மிகக் குறைவானளவு நகைகளையே அணிந்திருப்பார்கள்.

பிள்ளைகள் பாவம். அவர்கள் பிறந்து வளர்ந்தது ஐரோப்பிய அல்லது மேல் நாட்டுக் கலாச்சாரத்தில், தாய், தகப்பன் சொல்லிக் கொடுத்திருந்தால்தானே அவர்களுக்கு தெரிந்திருக்கும். அவர்களின் உடுப்புக்களைப் பார்க்கும் போது தாய் தகப்பனுக்கு பெரிதாக உடுப்பு வாங்கும் செலவு வைக்க மாட்டார்கள் என்ற எண்ணம் தோன்றும்.

"வாற ஒகஸ்ட் வக்கேஷனுக்கு வாறம்" ஸ்கைப்பில் தகவல் வந்ததும் கொமட்டுடன் கூடிய அற்றாச் வாத் றூம் கட்டும் பணிகள் தொடங்கி விடும். ஏதோ கோவில் கர்ப்பக்கிரக வேலைகளை மேற்பார்வை செய்யும் முதலியார்கள் போன்று அடிக்கடி போன் பண்ணி கொமட் இந்தக் கலர் இருக்க வேண்டும், மாபிள் அந்தக் கலர் இருக்க வேண்டும், முகம் பார்க்கும் கண்ணாடி இவ்வளவு

நீள அகலம் இருக்க வேண்டும் என்று ஆலோசனைகள் சொல்வதுடன், வேலை எப்படிச் செய்ய வேண்டும் என்று மேசனுக்கும் சொல்லிக் கொடுப்பார்கள்.

ஒரு சாந்துக் கரண்டி, மட்டப் பலகை, தூக்குக் குண்டுடன் போய் நான்கைந்து அறைகள் உள்ள வீட்டை ஒரு வருடத்திற்குள் கட்டிவிட்டுப் போகின்ற மேசன்கள், இவர்களிடமிருந்து சுளையாய் வரப் போகின்ற பணத்துக்காகக் கூழைக் கும்பிடு போடுவார்கள்.

"தம்பி ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ வேலை அந்த மாதிரி இருக்கும். வந்து இருந்து பாத்திட்டுச் சொல்லுங்கோ" என்பார்கள்.

அதில் 'இருந்து' பார்த்துச் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

'சிலு சிலெண்டு காத்து வீசோணும், முள்ளெல்லாம் குத்த வேணும்' என்று பனை வளவுக்குப் போய்க் குந்தியிருந்து பனுவிலால் துடைத்தெறிந்ததெல்லாம் மறந்து போய்ப் பாசாங்கு காட்டுவார்கள்.

வெளிநாட்டிலிருந்து நேற்றுத்தான் வந்திறங்கிய அப்படியானதொரு வெளிநாட்டுக் குடும்பத்திற்கு இரண்டு வாரங்களுக்கு டிரைவர் வேலை பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கிறது.

புத்தம் புதிய வாகனங்ளை நாள் வாடகைக்குக் கொடுக்கும் புதிய வகையான பிஸ்னஸ் இப்போது யாழ்ப்பாணத்திலும் நடக்கின்றது. வாகனம் புல் இன்ஷரன்ஸில் நிற்கும். அக்ஸிடெண்ட் நடந்தாலும் பிரச்சினையில்லை. பெற்றோல் அல்லது டீசல் வாடகைக்கு எடுப்பவர்கள்தான் நிரப்ப வேண்டும். சின்னச் சின்னப் பழுதுகளுக்கு வாகனச் சொந்தக்காரர்களே பொறுப்பு. நாட் கணக்குப் பார்த்து வாடகை கொடுக்க வேண்டும்.

ஒரு விலையுயர்ந்த காரிற்கு நான்காயிரத்து ஐந்நூறிலிருந்து எட்டாயிரம் வரை வாடகை. ஜீப் வகைகளுக்குப் பத்தாயிரம் தொடக்கம் பதினையாயிரம் வரை வாடகை.

நான் சந்தித்திருந்த வெளிநாட்டுக் காரருக்கு பரோடா ஜீப்தான் பிடித்திருந்தது.

"அண்ணன் காலமை மருதடிக்கு றங்க வேணும்"

பிள்ளையார் தரிசனத்துடன் அவர்களின் யாழ்ப்பாணச் சுற்றுலா தொடங்கியது.

வாகனப் பயணத்தின்போது தாங்கள் வாழும் நாட்டுடன் யாழ்ப்பாணத்தை ஒப்பிட்டு, 'இந்த நாடு இப்படிப் போய் விட்டதே 'என்று பெரு மூச்சு விட்டார்கள்.

இருபத்தைந்து, முப்பது வருடங்களுக்கு முன்பு இந்த நாட்டில் வாழ்ந்தபோது இந்த நாட்டிற்காக என்ன செய்தீர்கள்? என்று கேட்டால் அவர்களின் பதில் 'ஒன்றுமில்லை' என்பதாகத்தான் இருக்கும்.

கடந்த இருபத்தைந்து, முப்பது வருடங்களில் இந்த நாட்டுக்கு என்ன செய்தீர்கள்? என்று கேட்டாலும் அவர்களின் பதில் 'ஒன்றுமில்லை' என்பதாகத்தான் இருக்கும்.

ஆனால் இந்த நாட்டின் தலைவிதியை எண்ணி மனம் வருந்துவார்கள்.

முன்பொருநாள் ஒரு புகையிரதப் பயணத்தின் போது இரண்டு வெளிநாட்டுக்காரர்களின் உரையாடல் என் செவிகளில் விழுந்தது. 'இந்த நாட்டை ஒரு அபிவிருத்தியடைந்த நாடாகப் பார்க்காமலே நாங்கள் செத்துப் போய் விடுவோமோ' என்ற கவலைதான் அவர்களின் பேச்சின் சாராம்சமாக இருந்தது. அவர்கள் அறியாமல், அவர்களைத் திரும்பிப் பார்த்தபோது என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

இந்த நாட்டில் வாழும் வழி தெரியாமல், ஒரு அபிவிருத்தியடைந்த நாட்டிற்குச் சென்று, அங்கு வாழ்கின்ற ஒரு அடிமட்டக் குடிமகனின் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு எப்படி இவர்களால் இத்தனை பாசாங்கு காட்ட முடிகிறது?

"நான் படிச்ச பள்ளிக் கூடத்துக்கு போக வேணும் என்ன?" என்பார்கள். அங்கு சென்றால் இவர்கள் அங்கு படித்ததற்கான எந்தவொரு அடையாளமும் இருக்காது. இவர்கள் தங்களை அறிமுகப்படுத்துவதற்கு எந்தவொரு அடையாளமும் இவர்களிடமும் இருக்காது.

"நான் லண்டன்"

"நான் கனடா"

"நான் சுவிஸ்"

"நான் பிரான்ஸ்"

இப்படி ஏதாவதொரு நாட்டின் பெயர்தான் அவர்களின் அடையாளமாக இருக்கும்.

இவர்கள் பெரும்பாலும் பாடசாலையிலிருந்து துரத்தப்பட்டவர்களாகவோ அல்லது தாமாகவே ஏழாம் எட்டாம் வகுப்புடன் பாடசாலையிலிருந்து விலகியவர்களாகவோ இருப்பார்கள் என்பது அதிபருக்குப் புரிந்தும் "வாங்கோ. இருங்கோ " என்பார்.

'Antything is better than nothing" என்பதற்கு அமைய, கிடைத்தவரை லாபம் பெறும் நோக்கத்துடன் இவர்களிடமிருந்து பாடசாலை அபிவிருத்திக்காக எதையாவது பெற்றுவிடும் நோக்கத்துடன் அதிபர் பாடசாலையின் தேவைகளைப் பட்டியலிடுவார். தனது சொந்தக் காசில் கூல் ட்ரிங்கும் வாங்கிக் கொடுப்பார். இவர்களின் பதில் ஒரே மாதிரித்தான் இருக்கும்.

"நான் கனடா போனதும் OBA யுடன் கதைக்கிறேன். OBA இற்கு இது சின்ன விஷயம் என்ன? என்பார்கள்.

இவர்களுக்கு OBA யைத் தெரியுமா? OBA இற்கு இவர்களைத் தெரியுமா? என்பது இவர்கள் மட்டும் அறிந்த இரகசியம்.

இவர்களைப் போன்ற பலரை அதிபர் சந்தித்திருந்தாலும் ஒவ்வொருவரையும் இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பார்.

பாடசாலையிலிருந்து திரும்பி வரும்போது தங்கள் நாட்டின் எடியூகேஷன் சிஸ்டத்தையும், இலங்கையின் எடியூகேஷன் சிஸ்டத்தையும் கொம்பையர் பண்ணுவார்கள்.

தமது பிள்ளைகள் மெடிஷினோ, இஞ்சினியரிங்கோ செய்வதாகச் சொல்வார்கள். படித்துக் கொண்டே பாட்ரைம் வேலை செய்து உழைப்பதாகச் சொல்வார்கள் அல்லது பாட்ரைம் வேலை செய்து உழைத்துத்தான் படிப்பதாகச் சொல்வார்கள்.

என்னுடைய வெளிநாட்டுக்காரரும் மருதடியானைத் தொழுது, சுளையாகப் பத்து ரூபாய் காணிக்கை செலுத்தி, அவர் படித்த பாடசாலைக்குச் சென்று அதன் அபிவிருத்தி பற்றிக் கலந்துரையாடியாயிற்று!

"அடுத்தது எங்க தம்பி?" என்னுடைய பங்கிற்கு நான் கேட்கிறேன்.

"என்னப்பா ......அடுத்தது எங்க றங்குவம்?"

"பிஸ் மாக்கற் என்ன?" அம்மணியிடமிருந்து பதில் வந்தது.

நல்லூர் திருவிழா தொடங்க முன்னர் சிலர் ஆட்டுக் கிடாய் வாங்கி வீட்டில் கட்டுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறன். கோவிலுக்குச் சென்று வந்ததும், ஆட்டுக் கிடாய்க்குச் சாப்பாடு, தண்ணி வைத்த பின்னர்தான் தாங்கள் சாப்பிடுவார்களாம்.

திருவிழாவும் வளர வளர கிடாயும் வளர்ந்துகொண்டிருக்கும்!

பிறகென்ன... எனக்கு அதுதான் நினைவுக்கு வந்தது.

மருதடியிலிருந்து பாடசாலை....

பாடசாலையிலிருந்து பிஸ் மாக்கற்.....

மருதடியானே..........!

மீன் சந்தைகளில் இவர்களின் அட்டகாசம் இருக்கிறதே......! அப்பப்பா........ சொல்லி மாளாது. இரண்டு ரூபாய்கு சூடை மீன் வாங்கித் தீயல் வைத்து, அவித்த மரவள்ளிக் கிழங்குடன் தின்றதெல்லாம் மறந்து விடுவார்கள்.

ஐயாயிரம் ரூபாய் விற்கக் கூடிய மீனை அவன் பன்னீராயிரம் ரூபாய் சொல்ல, இவர்கள் பேரம் பேசி பத்தாயிரம் ரூபாய்க்கு வாங்குவார்கள்.

"நாங்களும் அங்க கஷ்டப்பட்டு உழைக்கிற காசுதான்" என்று தங்களுக்கு காசின் மதிப்புத் தெரியுமென்றும் காட்டிக் கொள்வார்கள்.

"இண்டைக்கொருக்கா வடிவா சாப்பிடுவம் என்ன?"

"ஓமோம், நாங்கள் றங்குறதுக்குள்ள ஒருக்கா கூழ் காச்சிக் குடிக்க வேணும்"

"அண்ணன் வாற சனிக்கிழமையும் ஒருக்கா மாக்கற்றுக்கு வருவம்"

"கல்வியங்காட்டுக்குப் போவம். அங்கதான் பருத்துறை மீன் வரும்" என்கிறேன்.

"சைனீஸ் எயார்லைன்ஸ் கொம்பட்டபிள் இல்லை"

"சாப்பாடு சரியில்லை"

"டிரான்ஸிற்றில இரண்டு மணித்தியாலம் நிக்க வேண்டி வந்திட்டுது"

"உடம்பு அலுப்பு மாறேல்ல"

வழமையான பல்லவிதான்.

எத்தனை தடவை கேட்டாயிற்று.

பல்லவியிலிருந்து சரணம்வரை எதுவும் மாறுவதில்லை.

வாசலில் ஜீப்பை நிறுத்தும் போது "அண்ணன் ஈவினிங் நல்லூருக்கு றங்குவம். ஒரு 4 மணிக்கு வந்திடுங்கோ" என்றார்.

'நீங்கள் இப்ப என்ன உயரத்தில் ஏறியா நிக்கிறீங்கள்? இறங்குவதற்கு' என்று கேட்க நினைத்துவிட்டு, ஓமோம். கட்டாயம்" என்கிறேன்.

பரோடா ஜீப்பை அவர்களின் வீட்டு முற்றத்தில் நிறுத்திவிட்டு நடந்து செல்கிறேன். கையை வீசிப்போட்டு காலாற நடப்பதில் உள்ள சுகம் பரோடா ஜீப்பில் பயணிக்கும் போது கிடைப்பதில்லை. உலகத்தின் அழகை, அசைவை 'மெதுவாக' இரசிப்பதில் உள்ள சுகம் பலருக்குத் தெரிவதில்லை.

நடந்து சென்று கொண்டிருக்கும் போதும் என் சிந்தனையில் வெளிநாட்டுக்காரர்கள் பற்றி ய எண்ணமே ஓடுகின்றது.

ஒரு வளர்ச்சியடைந்த நாட்டில் 25,30 வருடங்கள் வாழ்ந்த பின்னரும் அங்குள்ள அடிமட்டக் குடிமகனின் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்கள் அடிக்கும் ஜம்பத்திற்குக் காரணம் என்ன?

தாழ்வு மனப்பான்மையா?

நாங்கள் வெளிநாட்டிலும் நல்லபடியாகத்தான் வாழ்கின்றோம் என்பதை மற்றவர்களுக்குக் காட்டும் முயற்சியா?

பெரிய மோட்டார் சைக்கிள்........

பெரிய கார்.......

பெரிய வீடு.........

அவர்களிடமிருக்கும் எல்லாமுமே பெரிதுதான்.

நமது தாய்நாட்டில் வாழுகின்ற கோடீஸ்வரர்கள் எவரும் தங்கள் வீடு பற்றியோ கார் பற்றியோ பெருமை பேசிக் கொள்வதில்லை.

இவர்கள் மட்டும் ஏன் இப்படி?

தமது நாட்டில் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு ரூபாய் உதவி செய்ய மாட்டார்கள். இங்கிருக்கும் கஷ்டப்பட்ட குழந்தைகளுக்கு கூட உதவி செய்யமாட்டார்கள். ஆனால் தாங்கள் ஒரு பிள்ளையைத் தத்தெடுத்து வளர்ப்பதாகவும், நான்கைந்து சிறுவர்களுக்கு

கல்விச்செலவு செய்வதாகவும் சொல்லிக் கொள்வார்கள்.

இங்கிருந்து யாரேனும் ஏதேனும் உதவி கேட்டால் 'பிள்ளைக்குப் பால்மா வாங்க காசில்லாமல் கஷ்டப்படுகின்றோம்' என்பார்கள்.

ஒரு நாளுக்கு இலங்கைப் பணத்தில் 1500 ரூபாய் செலவழித்து முயல் வளர்ப்பதாய் சொல்பவர்கள், தங்கள் பணத்தில் நெருக்கமானவர்களுக்கு கடனாகக் கொடுத்த 1500 ஐத் திருப்பிக் கேட்பார்கள்.

அபிவிருத்தி பற்றி அடிக்கடி பேசிக் கொள்வார்கள்.

அபிவிருத்தி.........?

இந்த நாட்டின் அபிவிருத்திக்கு என்ன பங்களிப்பைச் செய்திருப்பார்கள்? இந்த நாட்டை விடுவோம். தற்போது தாங்கள் வாழும் நாட்டின் அபிவிருத்திக்கு என்ன பங்களிப்பைச் செய்திருப்பார்கள்?

அரசாங்கம் கொடுக்கும் உதவிப் பணத்தில் தாங்கள் பிழைப்பு நடத்துவதற்காக பெற்றவர்களை அழைத்துத் தம்முடன் வைத்திருக்கும் ஒரு கூட்டம்.......

தங்கள் பிள்ளைகளையும் வீட்டையும் பராமரிப்பதற்காக, பெற்றவர்களைத் தம்முடன் அழைத்து வைத்திருக்கும் ஒரு கூட்டம்......

இலங்கையில் தங்களின் வீடு வளவுகளைப் பராமரிப்பதற்காக பெற்றவர்களைப் பயன்படுத்தும் ஒரு கூட்டம்.......

பெற்றவர்கள் இலங்கையில் எப்படி இருக்கிறார்கள்?என்பது தெரியாமலே வாழுகின்ற இன்னொரு கூட்டம்.......

தம்மைப் பெற்றவர்களைக் கூட உண்மையான அன்புடன் பார்ப்பதற்கு வக்கில்லாதவர்கள் இலங்கையின் அபிவிருத்தி பற்றிக் கவலைப்பட்டுக் கொள்வார்கள்.

அன்றைய மாலைப் பொழுது நல்லூர் முருகன் கோவிலில். முருகப் பெருமான் எப்படித்தான் பொறுத்துக் கொள்கிறாரோ தெரியவில்லை. 10 ரூபாய்க்கு அர்ச்சனை செய்து, 10 ரூபாய் உண்டியலில் போட்டுவிட்டு, தங்கள் பக்கத்துத் தெருவில் உள்ள மாதா கோவில் பெருநாளுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் சர்பத் கொடுத்ததாக சொல்லிக் கொள்கிறார்கள்.

நானும் என் பிழைப்புக்காக அவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்கின்றேன்.

அன்றைய தினம் ஒரு மாதிரியாக.... நிறைவுக்கு வந்தது.

"நாளைக்குக் காலமை ஊருக்குப் போய் வருவம் அண்ணன்"

நான் "சரி" யென்று தலையாட்டுகின்றேன்.

ஊருக்குச் செல்லும் போது மனைவியும் பிள்ளைகளும் வரமாட்டார்கள் என்ற என் எண்ணம் பொய்க்கவில்லை. அவர்கள் வருவதற்கு விரும்புவதில்லையோ அல்லது தங்கள் அபிவிருத்தியடையாத கிராமத்தைக் காட்டுவதற்கு இவர்கள்

விரும்புவதில்லையோ தெரியாது. பெரும்பாலான வெளிநாட்டுக்காரர்கள் தங்கள் சொந்தக் கிராமத்திற்கு தனியாகத்தான் செல்வார்கள்.

யாழ்ப்பாணம்-மானிப்பாய் வீதிதான் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே மோசமான வீதி. கடாரம் வென்ற சோழன் தன் குதிரை வண்டியில் செல்லும்போது அனுபவித்த சுகத்தை நாமும் அனுபவிக்கலாம்.

மோட்டார் சைக்கிளாகட்டும், காராகட்டும் பஸ்சாகட்டும், ஜீப்பாகட்டும் எல்லாம் குதிரை வண்டிதான்! பழைய சைக்கிள் மட்டும் தான் சும்மா வழுக்கிக் கொண்டு பறக்கும். சின்னச் சின்ன கிடங்குகளுக்கும், பம்புகளுக்கும் லாவகமாகக் கான்டிலைத் திருப்பித் திருப்பி ஓடுவது ஒரு சுகம்தான். சிறுவர்கள் தொடக்கம் வயதானவர்கள் வரை சைக்கிள் செலுத்தும் இலாவகம் இருக்கிறதே..... அதனை நேரடியாகப் பார்த்தால்தான் தெரியும்.

"அண்ணனோட இப்பதான் மனம் விட்டுக் கதைக்கப் போறன்"

"சொல்லுங்கோ தம்பி"

"இப்ப எங்கட நாடு எப்படி இருக்கு? சனங்கள் சந்தோஷமாக ..இருக்குதே?"

"எங்க தம்பி சந்தோசம்? சந்தோசமா இருக்கிற மாதிரி ஒரு மாயேல இருக்கினம்"

"ஏன் அண்ணன்? நாடு நல்லா இருக்கிற மாதிரித்தான் தெரியுது. ஏராளமான கட்டிடங்கள் புதுசு புதுசா வந்திருக்கு. வாகனங்கள் ஓடுது, றோட்டுக்கள் திருத்திக் கிடக்கு. கோயில்,குளம், கொண்டாட்டம், சினிமாப்படமெண்டு சனங்கள் சந்தோஷமாகத்தானே இருக்கு"

"மேலோட்டமாப் பாத்தா அப்படித்தான்" தெரியும்......"

"என்ன அண்ணன் இழுக்கிறியள்? எனக்கு விளங்கேல"

புதுசு புதுசா கட்டிடங்கள் வந்தது உண்மைதான் தம்பி. ஆனா, அதுக்காக எவ்வளவு தோட்டந்துரவுகள், வயலுகளை அழிச்சுப் போட்டாங்கள் எண்டு தெரியுமே? மரந்தடி எல்லாம் தறிச்சுப் போட்டாங்கள். வெள்ள வாய்க்காலுகளுக்கு குறுக்கால எல்லாம் மண்போட்டு உயத்தி..... அதெல்லாம் பெரிய கூத்துத் தம்பி".

"எங்கட சனத்தின்ர வாழ்வாதாரமே விவசாயம் தானே?"

"ஓமோம். யாழ்ப்பாணத்தில மிகப்பெரிய உற்பத்தி விவசாயந்தான். அது நாசமாப் போய்க் கொண்டிருக்குது"

"மரந்தடியளை தறிக்கிறதால வெக்கை கூடுறதயும் சூழல் மாசடையுறதையும் பற்றிச் சனங்கள் யோசிக்கிறேலேயா அண்ணன்?"

"எங்க தம்பி? அவனவன் தன்னைப் பற்றியும் தன்ர குடும்பத்தைப் பற்றியும் தான் யோசிக்கிறான்?"

"வெள்ள வாய்க்காலுகளை மண்போட்டு உயத்தினா யாழ்ப்பாணம் போன்ற

குடாநாடுகளில் நீரோட்டம் தடுக்கப்பட்டா, என்ன நடக்கும்? தொடர்ந்து மூண்டு நாலு நாளைக்கு மழை பெஞ்சால் குடாநாடே அழிஞ்சுபோமெல்லே அண்ணன்?"

"தான் மட்டும் நல்லா வாழ்ந்தாக் காணுமெண்டுதான் ஒவ்வொருத்தனும் யோசிக்கிறான். தன்ர நாட்டைப் பற்றி ஆர் யோசிக்கிறான்?"

"நல்ல விலை கூடின வாகனங்கள் எல்லாம் ஓடுது அண்ணன். அப்ப மக்களின்ர பொருளாதாரம் கூடி இருக்கெண்டுதானே அர்த்தம்?"

"பொருளாதரம் கூடியிருக்கோ? ஓடுற வாகனத்தில முக்கால்வாசி லீசிங்கில நிக்குது. அரைவாசிப் பேர் ஒழுங்கா தவணைப் பணம் கட்டுறேல லீசிங் கொம்பனிக்காரன் பறிச்சுக் கொண்டு போறான். லீசிங் யாவாரத்தால யாழ்ப்பாணத்தான்ர காசு முழுக்க தென்னிலங்கைக்குப் போய்ச் சேருது"

"வாகனத்தில் இவ்வளவு விசயம் இருக்குதே! சின்னச் சின்னப் பெடியள் எல்லாம் மோட்டச் சைக்கிள்ள ஓடித் திரியுறாங்கள். அவங்களுக்கு பெற்றோலுக்கு காசு எங்கால?"

"தமயன்மார் வெளிநாட்டில இருந்து உழைச்சு அனுப்புற காசு.... தகப்பன்மார் உழைக்கிற காசை, வாயைக் கட்டி வயித்தைக் கட்டிச் சேர்த்து ஆத்தைமார் உவேற்றக் குடுக்கினம்"

"பாக்க விளங்குது அனேகம் பேர் ஒரு அலுவலுமில்லாமல் சும்மா அங்கயும் இங்கயும் ஓடித் திரியுறாங்கள்"

"அது மடடுமே? புதுப் படம் வந்தாப் பாக்க வேணும் பெரிய பெரிய கட் அவுட்டுக்கள் வச்சுப் பால் அபிஷேகம் செய்யுறாங்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் எத்தினை பேர் கிடக்க உவங்கள் கூத்தாடியளுக்கு பால் அபிஷேகம் செய்யுறாங்கள்"

"இந்தியாத் தமிழ்ப் படத்தைப் பார்த்து அதை மாதிரித் தாங்களும் செய்யுறாங்கள். கிட்டடில தலேன்ர குரூப், தளபதீன்ர குரூப்பெண்டு கஸ்தூரியார் றோட்டில அடிபட்டவங்கள் எண்டு இன்ரநெற்றில் பாத்தனான்"

ஓம் தம்பி வெக்கங் கெட்ட சீவியம் மற்றவன் எல்லோருக்கும் பகிடிக்கிடமாய் போனம். ஆமி, பொலிஸ்காரனெல்லாம் புதினம் பாத்து கொண்டு நிண்டவங்களாம்"

"உப்பிடி விஷயங்கள் நடந்தா அவங்களுக்குச் சந்தோஷம் தானே! யாழ்ப்பாணத்தின்ர கலாச்சாரம்தானே தமிழன் வாழுற உலகமெல்லாம் பரவிக் கிடக்கு. அந்தக் கலாச்சாரத்தில இருந்துதானே உலகத்தைத் திரும்பிப் பாக்க வச்ச போராட்டம் தொடங்கினது. அப்பிடிப்பட்ட கலாச்சாரம் அழிஞ்சா அவங்களுக்கு சந்தோஷம் தானே"

"எங்கட கலாச்சாரத்த அழிக்கிறதுக்கான லோங் ரேம் புறெஜெக்ட் தம்பி எங்கட

நாயள் விளங்காமல் நடக்குதுகள்"

அவர் மௌனமாக ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறார். திரும்பவும் நானே பேசுகிறேன்.

"கொண்டாட்டங்கள் நல்லா நடக்குதெண்டு சொன்னீங்கள் எல்லே அது எப்படி நடக்குதெண்டு தெரியுமே?"

"யோசிச்சுப் பார்க்கவே விளங்குது அண்ணை. கடன் தண்ணி பட்டு, பெரிய ஹோலுகளில கொண்டாட்டம் வச்சு மற்றவைக்குப் பகட்டுக் காட்டிப் போட்டு, பிறகு ரண்டு மூண்டு வருஷத்துக்குத் தின்னாமல் உண்ணாமல் கிடந்து கடனைக் கட்டுவினம்"

எங்கட நாட்டில நடக்கிறத அப்படியே சொல்லுறியள் தமபி!"

:"இஞ்ச மட்டுமில்ல அண்ணை, அங்க உள்ள எங்கட ஆக்கள் கனபேர் இப்படித்தான் 30 வருஷமா வாடகை வீட்டில இருந்து கொண்டு கடன் தண்ணி பட்டு அறுவதாவது பிறந்தநாள் கொண்டாடுவினம்"

"வெளிநாட்டுக்காரன்" என்ற ஏளனம் மாறி அவர்மீது எனக்கொரு மரியாதை ஏற்படத்தொடங்கியது. தம்பி உங்கட சின்ன வயதில் பள்ளிக்கூடம் போற நேரம் தவிர பின்னேரத்தில என்ன செய்யுறனியள்?"

"உங்களுக்குத் தெரியாதே? வீட்டில தோட்டம், கோழி வளர்ப்பு, பின்னேரம் முழுக்க விளையாட்டு, தாச்சி, புட்போல், வொலிவோல்.... அது ஒரு காலம் அண்ணை"

"இப்பத்தயப் பெடியள் என்ன செய்யுறாங்கள் தெரியுமே தம்பி?"

ஓமண்ண இன்ரநெட், பேஸ்புக் ருவிற்றர்..... அது இஞ்ச மட்டுமில்ல அங்கத்தயப் பிள்ளையளும் இப்பிடித்தான்...."

"அரைவாசிக்கு மேலை உதுகளுக்க தலையைக் குடுத்திட்டுக் கிடக்க மிச்சம் அரைவாசியும் சினிமாப் படம் எண்டு திரியுதுகள். அரைகுறை உடுப்புக்களும் கழண்டு விழ விழ ரௌசரும் போட்டுக் கொண்டு ரௌடியளா அலையுதுகள்"

"படங்களிலும் அப்படித்தானே காட்டுறாங்கள். ரௌடியள் குடிகாரன்கள் தானே இப்ப பாடங்களில ஹீரோ"

"படங்களின்ர பேருகளைப் பாருங்கோ. 'த்ரிஷா இல்லாட்டி நயன்தாரா' 'நானும் ரௌடிதான்' "புறம்போக்கு"

அவர் சத்தமாகச் சிரிக்க நானும் சிரிக்கிறேன் நாங்கள் செல்ல வேண்டிய இடம் வந்து விடுகிறது. மீண்டும் அந்த வெளிநாட்டுக்காரனைப் பார்க்கிறேன்.

இவ்வளவு நேரமும் இயல்யாக இருந்தவரிடம் ஏன் இந்த மாற்றம்? என்ற வினா என் மூளையைக் குடைகிறது. அவர் திரும்பி வந்து ஜீப்பில் ஏறியபோது நேரடியாகவே கேட்டு விடுகிறேன்.




"என்ன செய்யுறது அண்ணை குரங்கு வேஷம் போட்டாக் குரங்காட்டம் ஆடித்தானே ஆகோணும்"

அந்தப் பதிலில் இருந்த அர்த்தம் எனக்கு விளங்குகிறது. நான் மௌனமாக இருக்கிறேன்

"அண்ணன் சண்டிலிப்பாய் சந்தில இருக்கிற சைக்கிள் கடையில ஒருக்கா நிப்பாட்டுங்கோ"

"ஏன் "தம்பி

நான் இஞ்ச இருக்கேக்க ஓடித்திரிஞ்ச பழைய சைக்கிள் அங்க நிக்குதாம். அதைத் திருப்பி வாங்கப்போறன்.

"நான் ஆச்சரியம் அடைகிறேன்.

என்னதான் பகட்டான வாகனங்களில் பிரயாணம் செய்தாலும் அன்று அந்தப் பழைய சைக்கிள்களில் ஓடித் திரிந்த சந்தோஷம்........

அதனை மறக்காத ஒரு சிலர் இப்போதும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மற்றவர்களும் மறந்திருக்க மாட்டார்கள்.

மறந்தது போல நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களும் ஒரு வகையில் உலக நாயகர்கள்தான்!.

(கற்பனையல்ல...........!)

அமுதநதி சஞ்சிகையில்
மிகக் குறைந்த செலவில்
விளம்பரங்கள்
செய்து கொள்ளலாம்

தொடர்புகளுக்கு..

077 264 02 02

# அண்மைக்காலத்தில் வெளிவந்து எம்கரம் கிடைத்த நூல்கள்



**"முல்லைநிலமும் நந்திக்கடலும்"**
நூலாசிரியர்: முல்லைத்திவ்யன்
விலை: 150/-




**"சுதந்திரம்"**
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்
விலை: 250/-




**'My Choice'**
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்
விலை: 250/-

## நல்ல வேளை துஞ்சிவிட்டாய்

லாவண்யா

மெல்லத் தமிழ் இனி
சாகும் ..என
கூறியே சென்றான் ஒருவன்
பொங்கிய கோபத்தில்
நீயும்... எம் தமிழ்
வீழுமோ என்றாய்

வீரம் விளையாடிய
விந்தையின் மொழியாம்
காதல் பேசிய
அன்பின் மொழியாம்
வாகைகள் சூடிய
வெற்றியின் மொழியாம்...
இன்று
காகிதச் சங்கிலிக்குள்
கட்டுண்டே கிடக்கு

முத்துத் தமிழின்
தீஞ்சுவை அமுதம்
தீண்டுதற்கரிதாய்
மாறுதல் முறையோ...

அந்நிய மொழியாம்
ஆங்கிலம் அதையே
கற்பதில் புண்ணியம்
நினைப்பது தகுமோ...

மூத்த தமிழா
பாரதி நீயும்
நல்ல வேளை
துஞ்சியே போனாய்...


இல்லை எம் மானுடத்
தமிழன் தீஞ்செயல் கண்டு
கோபத்தில் அக்கினி
சுடரென எரிவாய்

அற்ப பதர்களே
ஆங்கிலப்பிரியரே
செந்தமிழ் வீழ்ந்திட
செய்திடும் சீலரே

முதலில்....
சீரிய செம் மொழி
எம் சிந்தையில் நிறுத்தி
அந்நியர் மொழிகளை
அழகாய் கற்போம்...

# நூல் அறிமுகம் "ஏழாவது ஊழி"

பொ.சத்தியநாதன்



நம் தாய்மொழி தமிழில் நூல்களின் பெருக்கத்துக்குக் குறைவில்லை. எனினும் தமிழ்மொழியை நிலைபெறச் செய்யவும் அதன் பயன்பாட்டை முதன்மையும் மேன்மையும் பெறச் செய்யவும் வேண்டிய நூல்களின் பற்றாக்குறை நிறையவே உண்டு. அறிவு, துறை ரீதியாகவும் விடயரீதியாகவும் அதிகரித்துக் கொண்டு போக அதன் நுகர்வோரும் பயனாளிகளும் தம்மொழியின் வாயிலாக அத்தேவையை நிறைவுசெய்து கொள்ளக் கூடிய வாய்ப்பைப் பெறவேண்டும் இதனை "பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என பாரதியார் குறிப்பிடுகின்றார். இன்னும் தமிழ் மொழியில் அறிவியல் நூல்களும் மருத்துவம், பொறியியல், சமூகவியல், சார்ந்த நூல்களும், ஆய்வுகளும் பல்கிப்பெருகும் போது நம்மொழி மூலமான உசாவுகைகளும் கண்டுபிடிப்புக்களும் ஆய்வுகளும் சமூக மேம்பாடும் அதிகரிக்கும்" என கல்வியியலாளர்கள் கூறுகின்றனர். எனவே இன்றைய அவசியத்தேவை ஒன்று இன்றைய எழுத்தாளர்களிடம், நூலாக்குநர், நூலாக்கக் குழுவினர் என்போரிடம், சமூக ஆர்வலரினாலும் தமிழ் மொழிப் பற்றுடையவராலும் உணர்த்தப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட அடிப்படையில் தமிழ்மொழியின் நிலைபேற்றுக்கும் அதன்வழி கல்வித்துறை சார்ந்த அறிவியல் தொடர்பான மேம்பாட்டுக்கும் பொருத்தமாக அல்லது அவற்றின் தேவையை (ஒரு பகுதியளவிலாவது) நிறைவு செய்யக்கூடிய நூல்கள் வரிசையில் பொ.ஐங்கரதேசனின் "ஏழாவது ஊழி" சுற்றுச்சூழல் கட்டுரைகள் என்ற நூல் அமைந்துள்ளது.

ஏழாவது ஊழி என்ற இந்த நூல்பற்றி அறிமுகம் இங்கு காலங்கடந்ததும் மீண்டும் மேற்கொள்ளப்படும் முயற்சி எனினும் "இன்றும் தேவை" என்ற அடிப்படையிலேயே இங்கு இந்நூல் அறிமுகம் இடம்பெறுகிறது.

"ஏழாவது ஊழி" 431 பக்கங்களைக் கொண்ட 41 கட்டுரைகளைத் தாங்கியுள்ள நூல். தமிழ்ச் சூழலியலின் பன்முகத்தன்மையையும், பிரச்சினைகளையும் ஆபத்துக்களையும், மிக நேர்த்தியாக எடுத்தியம்புகின்றது. இந்த நூலுக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது பதிப்புரையில் சேமமடு பதிப்பக பதிப்பாளர் கூறும் கருத்து இந்நூலுக்கு நல்ல ஒரு பதவுரையாகும் "ஏழாவது ஊழி" இயற்கை - சமூகம்- மனிதன் மீதான தொடர்விசாரணைகளை அழமாக மேற்கொள்கிறது. நமது சிந்தனைக்கும் கண்களுக்கும் செவிகளுக்கும்

இதுவரையில் எட்டாது இருந்து வந்த கொலைஞர்களை நமக்கு அம்பலப் படுத்துகிறது."

ஏழாவது ஊழி என்பது மனிதர் இயற்கைக்கு விளைத்த துரோகம் மனித இனத்தையே அச்சுறுத்தலுக்கு கொண்டு வந்து நிறுத்தியுள்ள ஆபத்து விளிம்பில் நிற்கும் நிலையைத் தெளிவுபடுத்துகிறது. இதனை இந்நூல் வாயிலாக "பூவுலகு எதிர்நோக்கியுள்ள பேராபத்தில் இருந்து அதனை மீட்டெடுப்பதற்கு வாசகர்களின் சிந்தனை மாற்றத்தையே பெரிதும் வேண்டிநிற்கின்றது" என, நூலாசிரியர் நூலின் நோக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இது இன்றைய பாடசாலைப் பாடக்கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள "நிலை பேண் அபிவிருத்தி" என்ற அலகின் முக்கியத்துவத்தை கல்விசார் அணியினருக்கு வலியுறுத்துவதோடு இப்பாடவிடய அலகில் அக்கறை கொள்வோருக்கு சிறந்த களஞ்சியமாகவும் உறுதுணையாகவும் விளங்குகின்றது.

இந்நூல் புவியின் வெப்பநிலை அதிகரிப்பும்(பச்சைவீட்டுவிளைவு) அதற்கான காரணங்களும், சூழல் மாசடைதல் நிலைமைகள், காடழித்தலால் ஏற்பட்டுவரும் புவிச்சமநிலை தொடர்பான விளைவுகள், இயற்கை வளங்களுக்கு ஏற்படுத்தப்படும் தீங்குகள், அண்டவெளிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள், அளவுக்கதிகமான இரசாயனவளமாக்கிகள், பீடைகொல்லிகளால் மனிதசமூகம் எதிர்கொண்டுள்ள நோய், வாழ்வியல் பிரச்சினைகள், நீரும் அது தொடர்பாக ஏற்பட்டிருக்கும் சவால்கள், மனிதர்களின் மிகை நுகர்ச்சிக் கலாச்சாரமும் வளவீண்விரயமும், தவறான உணவுப்பழக்கவழக்கம் நாகரிக மோகத்தால் உணவு, உடை போன்றவற்றால் மனிதர் தமக்குத்தாமே தோண்டும் புதைகுழி வாழ்வு, மரபுகள், தேசியம், தொன்மை, மொழி, பண்பாடு போன்றவற்றின் இழப்புக்கள் இதனால் சுயத்தை இழத்தல் போன்ற விடயங்களை எல்லாம் இந்நூல் தெளிவாகச் சிறப்பாக அடக்கியுள்ளது.

இந்நூலாசிரியர் தமிழ் மொழியோடு இணைந்த பண்பாடு, வரலாறு தனித்துவம் மேன்மை என்பவற்றை ஆதர்சித்து அதன்வழி மனித நாகரிகத்தையும் பண்பாட்டையும் ஆழமாக நேசித்து இந்த நூலை உருவாக்கியுள்ளார். இவர் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் இயற்கைச் சூழலியல் தொடர்பாகப் பெற்ற அனுபவம் இந்நூல்வழி வெளிவருகின்றது . இந்நூலுக்கு அவருக்குக் கிடைத்த ஊற்று "பட்டம், பட்டப்பின் படிப்பில் பெற்ற கள அனுபவங்களே" என ஆசிரியர் குறிப்பிடுவது எங்களது இளங்கலை மாணவர்கள் செயல்வழி . அனுபவக் கல்வியை பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுத்துகிறது.

இந்நூல் மொழிநடையால் சிறந்து விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. எளிய, துறைசார் மொழிநடை அற்புதமான கவிநயம் மிக்க தொடர்கள், கலைச்சொற்களும் நற்றமிழ்ச் சொற்களும், கருத்தை நயம் செய்கின்றன. சங்கத் தமிழும், குறளும், உலகக் கவிவரிகளும் விடயப் பொருளுக்கு ஏற்ற வகையில் "தலைப்புச் செய்திகளாக" மொழி நடையை அணி செய்து எண்ணக்கருவை வலிமைப்படுத்துகின்றன. தரவுகளும், தகவல்களும் தமிழ்மொழி

வாசனையோடு விமர்சனமாகவும், தர்க்கிப்போடும், விபரிப்போடும் எழுதப்பட்டிருக்கும் முறை அற்புதம். வாசிக்கத் தெவிட்டாத மொழிநடையால் இந்நூல் மிளிர்ந்து நிற்கின்றது.

இன்றைய காலத்தில் போலிவாழ்க்கையால் உந்தப்பட்டு உலகமயமாதல் வலையில் சிக்குண்டு அவசரமாயும் அர்த்தமற்றதாகவும் நகரும், அதேவேளை நாளைய சந்ததிக்கு துரோகம் செய்து முன்னோக்கி நகரும் எவ்வாழ்வின் பல்பரிமாணங்களையும் இந்நூல்வாயிலாக நாம்தரிசிக்கலாம். பூமி கொண்ட இயற்கை, அது பாலாகவும் தேனாகவும் மனிதருக்கு ஊட்டப்படும் அமுதம் மனிதனாலேயே நஞ்சாகவும் முள்ளாகவும் மாறிய, மாறிக்கொண்டிருக்கின்ற நிலையை இக்கட்டுரைகள் தெளிவுசெய்கின்றன.

இந்நூலுக்கு "ஏழாவது ஊழி" எனப்பெயரிட்டிருப்பது பூமி ஏற்கனவே ஆறு ஊழிகளைச் சந்தித்து விட்டதாகக் குறிப்பிடப்பட்டதையடுத்தே "பூமி தன் மீது உயிர்ப்பசையைப் பூசி ஏறத்தாழ 3.5 மில்லியன் வருடங்கள் ஆகின்றன. இந்த நீண்ட உயிர் வரலாற்றில் இதுவரையில் பூமி ஆறுபேரழிவுகளைச் சந்தித்திருக்கிறது", என ஆசிரியர் இத் தலைப்புக்கு முப்பத்தைந்தாவது கட்டுரையில் விளக்கமளிக்கிறார்.

"ஏழாவது ஊழி" சுற்றுச் சூழலியல் தொடர்பான ஒரு சிறந்த திரட்டு. மாணவர், ஆசிரியர், கல்வியியலாளர்கள், சமூகப்பொறுப்பு டையோர் யாவருக்கும் மிகத்தேவையான ஒருநூல். தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் கல்வித் துறைக்கும் அறிவுத்துறைக்கும் வரவேண்டும் என்பதற்கான ஒருவரவு. பூமியின் மகத்துவத் தையும் இயற்கையின் அருமையையும் மனிதரின் இருப்பியலின் அவசியத்தையும் நீண்ட நிலை பேண் அபிவிருத்தி மூலம் பேணிவாழ வழிகாட்டும் அதேவேளை மீள் நோக்கிச் சிந்திக்கத் தூண்டும் நூலாகும்.

சூழலியலாளர் பொ.ஐங்கரநேசனின் பணியால், தேடலால் இலக்கியப் புலமை யால், மொழி யாற்றலால் வெளிவந்த "எழாவது ஊழி" நூலின் சார்பாக அவர் இயற்கை நேயத்தையும் சமூக நேயத் தையும் பாரட்டுகிறோம். அவர் அவாவை மதித்து பூமி பூமியாகவும் இயங்கை இயற்கையா கவும் வாழ அவாப்படுகிறோம்

"ஏழாவது ஊழி" பதிப்பு 02 வெளிவந்து ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. வாசகர் இந்நூலைத் தேடிப் பெறுவீர்களாக, அதனை வாசித்து இயற்கைக்கு நலம் செய்வீராக,

## சிந்தனை செய்

உன் வாழ்வு சிறந்திட
வளமாக சிந்தனை செய்
உயர்வொன்று உருவாக
உணர்வாய் சிந்தனை செய்

உறவொன்று உயிர் பெற
உறவாய் சிந்தனை செய்
பிரிவொன்று உருவானால்
பரிவாய் சிந்தனை செய்

படியொன்று நீ ஏற
பண்பாய் சிந்தனை செய்
தோல்வியை நீ கண்டால்
வெற்றிக்காய் சிந்தனை செய்

சிந்தனைகள் உன்னிடம்
சிதறி சில்லறையாவதும்
சிறகடித்து வானில் பறப்பதும்
உன் சிந்தனையாலே.......
சிந்தனை செய்

**ம.ஏஞ்சலா**
மட்டக்களப்பு

# சிந்தனை செய் மனமே



ந.பார்த்தீபன்

எனது கண்கள் எந்தவொரு மனிதனும் காணக்கூடாத காட்சிகளைக் கண்டுள்ளன. படித்த பொறியியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட விஷவாயு கொண்ட அறைகள், படித்த வைத்தியர்களால் விஷ ஊசி ஏற்றப்பட்ட பிள்ளைகள், பயிற்றப்பட்ட தாதியரால் கொல்லப்பட்ட சிசுக்கள், உயர் கல்லூரிகளில் படித்த மாணவர்களாலும் பல்கலைக்கழகங்களில் படித்த பட்டதாரிகளாலும் எரிக்கப்பட்ட பெண்களினதும் கைக்குழந்தைகளினதும் சடலங்கள் என்பவற்றைக் கண்டுள்ளன.

இப்போது எனக்குக் கல்வி மீது சந்தேகம். இந்நிலையில் எனது கோரிக்கை உங்களிடத்தில் கற்றுக்கொள்ளும் மாணவர்கள் மானிடத்தை நேசிக்க உதவுங்கள். உங்கள் முயற்சி ஒரு போதும் படித்த இராட்சதர்களை, மனவிகாரம் படைத்த திறன்கொண்டோரை, படித்த அரக்கர்களை உருவாக்கக் காரணமாகாது இருக்கட்டும்.

வாசிப்பு, எழுத்து, கணிதம் என்பன எம் குழந்தைகளை மேலும் மானிடம் கொண்டமைய வழிகாட்டினால் மட்டும் அவை முக்கியமானவையாக விளங்கும். "எனக்குத் தரும் பட்டங்களைச் சான்றிதழ்களாகத் தரவேண்டாம். கைக்குட்டைகளாகத் தாருங்கள் கண்ணீர் துடைக்கவாவது உதவட்டும்" என்றொரு கவிஞர் எழுதியிருக்கிறார். இவற்றையெல்லாம் படிக்கும் போது எங்களது கல்வி தொடர்பாக உரத்துச் சிந்திக்க வேண்டியுள்ளதல்லவா?

இலங்கையில், உலகில் எந்த நாட்டிலும் இல்லாத இரு விடயங்கள் இலவசமாகக் கிடைக்கின்றன.ஒன்று சுகாதார சேவை. மற்றையது கல்விச் சேவை இரண்டும் பெருமையான சேவை என்று அழைக்கப்படுகிறது.

மருத்துவ சேவை மனிதனைப் பிணமாகாமல் தடுக்கிறது. கல்விச் சேவை மனிதனை நடைப்பிணமாகாமல் தடுக்கிறது என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது. ஆனால் இந்த இரண்டு விடயங்களிலும் மிக மோசமான நிலைமை காணப்படுகின்றது எனப் பலரும் அங்கலாய்க்கிறார்கள்.

இந்த அங்கலாய்ப்புகளிலும் நியாயம் இல்லாமல் இல்லை. இதிலுள்ள கவலைக்குரிய விடயம் என்னவென்றால் எவற்றை இலவசமாகப் பெற்றோமோ

அவற்றை அதிக விலைக்கு விற்கின்ற அவலம் எமது நாட்டில் தான் உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாதல்லவா?

இரண்டு துறைகளிலும் மேலதிக சேவை என்ற பெயரில் மேலதிக பணம் அறவிடப்படும் அவலம் காணப்படுகின்றது. இதனால் இச் சேவையைப் பெறுபவர்கள் அதிக மன உழைச்சலுக்கு உள்ளாவதும் நிகழ்கிறது.

இரு சேவைகளிலும் உரிய இடங்களுக்குச் சேவை பெறச் செல்லும்போது தனியார் சேவை இடங்களுக்கு வரும்படி சிபாரிசு செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்களும் அவற்றையண்டிப் பிழைப்பவர்களும் இத்தகைய தூண்டுதல்களைச் செய்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.


இத்துறை சார்ந்தவர்கள் தனியார் நிறுவனங்களிலும் இச்சேவையினை வழங்குவதால் ஒப்பீடு நடக்கின்றது. இந்த ஒப்பீட்டை, சேவையைப் பெறுபவர்கள் தான் மேற்கொள்கிறார்கள். என்ன தான் சொல்லுங்கோ, தனியார் நிறுவனத்துக்குப் போகும் போதுகிடைக்கும் கவனிப்பே தனி, சிறப்பாகக் கவனம் எடுக்கிறார்கள். கூடுதலான நேரம் அக்கறையுடன் செய்கிறார்கள் . இது இரு சேவைக்கும் பொருந்தும்.

"அரச ஆஸ்பத்திரியில் நூறு பேருக்கு ஒரு வைத்தியர், தனியார் ஆஸ்பத்திரியில் ஓர் ஆளுக்கு நூறு வைத்தியர்" என்று ஒரு கவிஞர் எழுதியது கவனத்துக்குரியது இது அரச பாடசாலைக்கும் தனியார் பாடசாலைக்கும் பொருந்தக்கூடியது.

முற்றிலும் இலவசமாக வழங்கப்படுவதால் அதன் அருமை மக்களுக்கும் தெரியவில்லை. உதாரணமாக பாடசாலைக்கு, வைத்தியசாலைக்கு ஒழுங்காகப் போவதை பெரிதும் கவனம் எடுப்பதில்லை. இதன் காரணமாக தனியார் துறை நோக்கிய பாய்ச்சல் மிக அதிகமாகின்றது. இது அதிக செலவீனத்தை மிக இயல்பாக்குகின்றது.

மிகப் புனிதமான சேவைகள், தனித்துவமான சேவைகள், அர்ப்பணிப்புள்ள சேவைகள், அத்தியாவசியமான சேவைகள் என்றெல்லாம் போற்றப்படுகின்ற இந்த இரு சேவைகளும் இன்று தனியார் மயமாக்கலின் விளைவாக கேள்விக்குரியதாய், கேலிக்குரியதாய் போயுள்ள நிலைமையை ஒவ்வொ ருவரும் சிந்திக்க வேண்டும்.

பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் மாறியது போல் இலவசமாய் வழங்கி இமயமாய் உயர நினைத்தது இன்று இரக்கமற்றதாய் மனித நேயத்தை, மனிதாபிமானத்தைக் குழிதோண்டிப் புதைப்பதாய் மாறியுள்ளமை கருத்திற் கொள்ளப்பட வேண்டியது.



"உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உறுதியும் உனக்குள்ளே குடிகொண்ருக்கின்றன..."

-சுவாமி விவேகானந்தர்


# கவிதை மழை

## சமாதான பூமியிலே

நம் சமாதான பூமியிலே
சோற்றில் கொஞ்சம் மண்
இன்று யுத்த பூமியிலே
மண்ணில் கொஞ்சம் சோறு

நீ செல்லும் பாதையில் தடைகள் இல்லை எனில்
அது நீ செல்ல வேண்டிய பாதை இல்லை
அது யாரோ ஒருவர் சென்ற பாதை
நீ செல்லும் பாதையில் தடைகள் உண்டு - எனில்
அதுவே நீ செல்ல வேண்டிய பாதை

**ர.அஞ்சலி**
வவுனியா



## நடப்பது நடக்கும்


நினைத்தது நடந்ததா நடந்ததை
நினைத்தேனா
நிஜமான இவ்வாழ்வில் அனைத்தும்
இறைவன் செயல்

நினையாதே மனமே நினையாதே
நாளை நடப்பதை இன்று நினையாதே
நடப்பது நடக்கும் நீ யார் நினைப்பதற்கு
நாளைக்கும் உனக்கும் என்ன தொடர்பு

போனதை நினைத்து புலம்பாதே
போனது நீ செய்த புண்ணியமே
போனது வந்தால் வந்தது போகும்
தானாக ஒன்றும் தரணியில் வராது

நினைப்பது வராது வருவதும் தெரியாது
தருவது எதுவோ அதுவும் புரியாது
வருவதை ஏற்போம் வழியினை வகுப்போம்
எல்லாம் காலம் செய்த கோலம்

**J.சசிலா சிராணி**
புத்தளம்



## நினைவெல்லாம் வலிகள்

வார்த்தைகளால்
வர்ணிக்க முடியுமா
வன்னி மண்தந்த
வலிகளை.......!

தமிழர் தம் நிலை கண்டு
தாரையாய் இரத்த வெள்ளம்
தலைக் குவியல்கள் ஒருபக்கம்
தசைக் குவியல்கள் மறுபக்கம்
அப்பப்பா எண்ணுகையில்
அழுகையாய் இரத்தம் சொரியும்...

ஓடி ஓடி களைத்தும் - நிம்மதியாய்
ஓய்வெடுக்க எண்ணுகையில்
ஓ வென வந்துவிழும் குண்டு -
எங்கும்
ஓலச் சத்தங்கள் காற்றில் மிதக்கும்
ஓசையின்றியே.....
ஓவியமாகும் மனித உடல்கள்.

உறங்கவோ
இடங்கள் இல்லை

உண்ண உணவுமில்லை -
நினைக்க
உதிரமே உறையுதம்மா !!

வளங் கொளிக்கும் வன்னி மண்
வடிவிழுந்து போனதே இன்று
வசந்தங்கள் தொலைந்தன
வக்கிரங்கள் வளர்ந்தன

இவை மட்டுமா - நாம்
இரந்தவையும் அதிகம்
இழந்தவையும் அதிகம்

**என். தீபா**

## உன்னோடு நான்

அன்பு செய்ய நானுண்டு
அத்தனையும் மறந்து விடு
துன்பம் உன்னைச் சேரும் என்ற
துயரினையும் துடைத்துவிடு
வம்பு செய்யும் உலகினிலே
வாழ்ந்திடவும் துணிந்து விட்டோம்
அம்பு போன்ற அன்பினையே
ஆயுதமாய்க் கொண்டிடுவோம்



**உதயன்**
வவுனியா

## நம்பிக்கை

நான் வாழ
நாகரீகம் தேவையில்லை
பாதையில் பயணிக்க
பார்வை தேவையில்லை
நீச்சல் பழக
நீர்த்தடாகம் தேவையில்லை - ஆனால்
வாழ்க்கையை வெல்ல
வாழ்நாளில் நம்பிக்கை தேவை
நம்பு உன்னை
நம்பிக்கையில்லையேல்
உன் வாழ்வு மரணித்து விடும்

**யோ. ஹர்சாந்தனி**
மாத்தளை

# புதிய மொழிகள்

நீ ஒவ்வொரு நாளும் கடிகாரம் பார்க்கும் போதும் எண்ணிக்கொள் உன் வாழ்வின் மணித்துளிகளை.

நீ ஒருவிடயத்திற்காக அழுகிறாய் துன்பப்படுகிறாயென்றால் நினைத்துக்கொள் நீ உன் இலட்சியத்தை எட்டிவிட்டாயென்று

நீ யாரால் அதிகமாகக் கோபப்படுத்தப்படுகிறாயோ நீ பொறுமையை கற்றுக்கொள்ள வேண்டியது அந்த நபரிடமிருந்துதான்.

நீ தோல்வியைத் தழுவுகின்றாயென்றால் அங்கே நீ கற்க வேண்டியது அந்த தோல்வியை எவ்வாறு அடைந்தாய் அதை எவ்வாறு திருத்த முடியும் என்று.

வாழ்வில் நீ தவறவிடும் ஒவ்வொன்றும் உனக்கும் உன் வாழ்க்கைக்கும் அவசியமில்லாதது என்று எண்ணிக்கொள்.

வாழ்க்கை என்பது குப்பைத் தொட்டியல்ல நீ கவலைகளை சேர்ப்பதற்கு மாறாக நீ சந்தோசத்தை சேர்க்க வேண்டிய பூந்தொட்டி.

ஞானத்தை வாவென்று கூப்பிட்டு. புத்தியை புதையலைத் தேடுவது போல் தேடு.

கடவுள் மேல் கொள்ளும் அச்சமே ஞானத்தின் ஆரம்பம்.

**சி.கிதர்சனா**



## சரித்திரமே என் அம்மா...!

அம்மா மூன்றெழுத்தில்
சொல்லிவிட அகராதி வார்த்தையல்ல
கருவறையெனும்
உயிரறை தாங்கி ஏழு
தலைமுறை எழுந்து பேசும்
வரையறை தாண்டிய வளர்மதி

உயிரணுக்கள் உட்புகுந்த
நாள் தொடங்கி ஆறடி நிலம்
செல்லும்வரை
என் சுவாசத்தில் கலந்து
அணையாது துளிர்விடும்
பொக்கிஷ விளக்கு
கருவறை என்றதும் சிலர்
சிறையறை என்றனர்
அங்குதான் நான்
சுதந்திரமாய் சிறகடித்தேன்
பசியென்று பதறவில்லை
வலியென்று கதறவில்லை
பத்துமாத சுமைதனையே
பக்குவமாய் ஏற்றெடுத்த
பாசமழை பசுமையவள்

உயிரொன்று உயிரில் வைத்து என்
சுமையை தானேற்று
தன்னுடலை தானீய்த்து
என்னுடலை உருவாக்க மெய்யுருவில்
நான் கண்ட தெய்வமில்லை என்
அம்மா அதற்கும் மேல் சிறந்தவளே

வயிற்றில் எனை சுமந்தபடி
நல்லுணவு உண்டிருப்பாள்
நான் வளர வேண்டும் என
விழிமூடி நானுறங்க
தாலாட்டி கவி வடிப்பாள்
தன் துயில் இழந்தவளாய்

எனக்கு வலிக்குமென்று ஆகாயம்
பார்த்தவளாய்
தினம் நீண்டு படுத்திருப்பாள்
அவளுக்கு வலிச்சுதென்றா
கதறிப் போய்த் துடித்தாலும்
தடவி என்னை அணைத்திருப்பாள்
சத்தியமா சொல்கின்றேன்
சரித்திரமே என் அம்மா
நான் திசைமாறி கிடக்கயில
சீஸர் பண்ணிக் கிழிக்கையில
நெருஞ்சி முள் குத்திவிட
உயிர் போன வலி போல
என்ன துடி துடித்திருப்பாள்
கதறி நான் பிறக்கையில
கைகள் அசைக்கையில
அவள் கண்டு மகிழ்ந்திருப்பாள்
முதல் முத்தம் கொடுத்திருப்பாள்

கருவறையில் இருந்துவிட
என்ன தவம் செய்தேனோ
முழுவதுமாய் போற்றிவிட
காலமில்லை என்னிடத்தில்
காதலித்துக் கூறுகிறேன்
காவியமே என் அம்மா

– வன்னியூர் கிறுக்கன்

## உறவுகள் மேம்பட

01. நான் பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்
02. அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விடுங்கள்.
03. எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள்.
04. சில நேரங்களில் சில சங்கடங்களைச் சந்தித்து தான் ஆக வேண்டும்.
05. எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்மந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
06. உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
07. மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும். இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும்.

**S.கீர்த்தனன்**
வவுனியா

"கல்விக்கண் திறக்க
கடைக்கண் திறந்தவர்
நெற்றிக்கண் திறந்தவருக்குச்
சமனாவர்"

**ம.சோபிதா**
யாழ்ப்பாணம்

# பொறுக்கியின் பொறுக்கல்

கத்தரிக்கோலை கைவிடுங்கள்
ஊசியை கையிலெடுங்கள்
சுவர்களை உடையுங்கள்
பாலங்களை உருவாக்குங்கள்

**சுவாமி சுக போதானந்தா**

எல்லாமே முன்
தயாரிக்கப்பட்டவை
ரெடிமேற் கேள்விகள்
அவற்றிற்கு நோட்ஸ்களில்
ரெடிமேற் பதில்கள்
வகுப்பறையில் ஆசிரியர்கள்
ஓய் வெடுக்கிறார்கள்
வெறும் மனப்பாடம் செய்யும்
இயந்திரமாய் (அதுவும்
முக்கியமான கேள்விகளுக்கு
விடைகளை மட்டும்)
மாணவர்கள் உருமாற்றம்
அடைந்து விட்டனர்

**ஆயிஷா இரா. நடராசன்**

வாழ்க்கையை முன்கூட்டி
மதிப்பிட உதவும் கலை கல்வி
இது மாறிவரும் வாழ்க்கையைப்
புரிந்து சமநிலையைக்
காத்துக்கொள்ளச்
சாத்தியமானது

**சுந்தரராமசாமி**

போற்றுவார் போற்றட்டும்
புழுதி வாரித்
தூற்றுவார் தூற்றட்டும்
தொடர்ந்து செல்
ஏற்றதொரு கருத்தை
உனதுள்ளம் ஏற்றாலே
எடுத்துரை
எவர்வரினும் நிற்காதே
எதற்கும் அஞ்சாதே

**– கவியரசு கண்ணதாசன்**

ஆண்கள் களைப்புற்ற பிறகு
திருமணம் செய்து கொள்கிறார்கள்
பெண்கள் ஆர்வமுள்ள போது
திருமணம் செய்து கொள்கிறார்கள்
இரண்டு பேருமே
ஏமாற்றமடைகிறார்கள்.

**– ஆஸ்கார் வொய்ல்டு**

# நிஜமுகம்



ஆ. ரவீந்திரன்

சாட்டிலே இருந்த திருநீற்றை எடுத்து திரிபுண்டலமாய்த் தரித்துக் கொண்டு "அப்பனே முருகா" என்று முருகப் பெருமானை நோக்கி ஒரு தடவை கரம் குவித்துவிட்டு தன் மதிய உணவை அருந்துவதற்காகச் சாப்பாட்டறையை நோக்கி மெல்ல நடந்தார் லோகநாதன். அவரின் வரவுக்காகவே காத்திருந்தவள் போல மனைவி சுமித்திரா உணவை எடுத்து மேசையில் வைத்துப் பரிமாறுவதற்கு ஆயத்தமானாள். லோகநாதன் வழக்கமாக ஞாயிற்றுகிழமைகளில் ஒய்வாக வீட்டில் இருப்பார். அன்று என்ன தலைபோகின்ற வேலை வந்தாலும் அதையெல்லாம் ஒத்திப் போட்டுவிட்டு அவர் அலட்டிக் கொள்ளாமல் இருப்பார். அதனால் மனைவி சுமித்திரா அவருக்குப் பிடித்தமான உணவு வகைகளையெல்லாம் செய்து பரிமாறுவாள். மதிய உணவை ரசித்து ருசித்துச் சாப்பிட்டுவிட்டு ஒரு குட்டித் தூக்கம் போடுவது லோகநாதனின் மிக நீண்டநாள் வழக்கமாக இருந்தது.

லோகநாதன் கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு சாப்பாட்டு மேசையின் முன்னால் அமரவும் மகன் ஆனந்தன் அங்கே வரவும் சரியாயிருந்தது. "அப்பா ஆழகேசன் மாமா வந்திருக்கிறார்" என்றான் ஆனந்தன். அழகேசன் என்ற பெயரைக் கேட்டதுமே லோகநாதன் முகம் சற்று மாறியது. "அழகேசனோ? அவனேனாம் இஞ்சை வந்தவன்?"என்றார் சற்றுத் தாழ்ந்த தொனியில் "ஏனெண்டு நான் கேக்கேல்லை கேட்டுக்கோண்டு வரட்டே" என்று திரும்பினான் ஆனந்தன் "வேண்டாம் வேண்டாம் நீ ஒண்டும் கேக்கவேண்டாம் அப்பா சாப்பிடுறாராம்.கொஞ்சநேரம் .இருக்கட்டாம் எண்டு போய்ச் சொல்லு" என்று கூறியவாறு மேசையின் பக்கமாகத் திரும்பினார். நான் உள்ளுக்கு வந்திருங்கோ எண்டு சொல்ல அவர் வேண்டாம் வெளியிலைதான் நல்லாக் காத்து வீசுது எண்டு சொல்லிக் கொண்டு மாமரத்துக்குக் கீழை கிடக்கிற வாங்கிலை இருக்கிறார்". என்று கூறிக்கொண்டு அப்பால் சென்றான் ஆனந்தன் "இஞ்சாருங்கோ நீங்கள் இன்னும் சாப்பிடத் துவங்கேல்லைத்தானே? போயொருக்கால் என்னெண்டு கேட்டிட்டு வாங்கோவனப்பா அந்தாள் என்ன அவசரத்திலை வந்திதோ தெரியாது" என்றாள் சுமித்திரா "ஓமோம் அவர் பெரிய ஒப்பீசர்தானே உடனை நான் ஓடிப்போய்ப் பார்க்கிறதுக்கு? மனிசனைச் சாப்பிடக்கூட விடாமல் வந்து கழுத்தறுக்கிறான் இவனை இப்ப ஆர் இஞ்சை வரச் சொன்னது?" என்றாவாறு ஒருவாய் சோற்றை எடுத்து வாயில் வைத்தார்

லோகநாதன் ."ஏனப்பா அந்தாளைக் கண்டு இப்படிக் கோபப்படுறீங்கள் அவர் உங்கடை கிளாஸ்மேற் றெல்லே? பாவம் நல்ல மனிசன் " என்றாள் சுமித்திரா "அது கிளாஸ்மேற் படிக்கிற காலத்திலை அதுக்காக அவர இப்பவும் என்னைத் தன்ரை கூட்டாளி எண்டு சொல்லிக் கொண்டு திரியேலுமோ? இண்டைக்கு நான் பாங்கிலை மனேச்சர். அவன் எனக்குச் கீழை வேலைசெய்யிற பியோன். அதை நினைச்செண்டாலும் இவன் எனக்குக் கொஞ்சம் மரியாதை தரக்கூடாதே. அண்டைக்கொருநாள் நான் என்ரை சீற்றிலையிருந்து பயிலொண்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறன் இந்த விசரன் அங்கை வந்து என்னை மச்சான் லோகு எண்டு கூப்பிடிறான். அங்காலையிருந்த டைப்பிஸ்ற் பெட்டை என்னையொரு மாதிரிப் பார்த்தாள். எனக்குச் சீலை உரிஞ்சு விழுந்தது மாதிரியிருந்திது. எனக்கு வந்த ஆத்திரத்துக்கு 'போடா அங்காலை இடியட் ' எண்டு சொல்லத்தான் வாயெடுத்தனான் பிறகு அப்படியேதும் சொன்னால் எனக்குத் தான் மரியாதையில்லை எண்டு பேசாமல் விட்டிட்டன் ."என்று நிறுத்தினார் லோகநாதன்."இந்தச் சின்ன விசயத்தை ஏனப்பா பெரிசுபடுத்துறீங்கள்? நீங்கள் இப்ப பெரிய பதவியிலையிருந்தாலும் பழைய பிரன்சிப்பை மறந்திருக்கமாட்டீங்கள் எண்டு அந்தாள் நினைச்சிதாக்கும். பாவம் நல்ல சீவன் நீங்கள் இந்தப் பதவியைக் கண்ட உடனை பழைய நட்பை மறக்கிறதோ"? என்றாள் சுமித்திரா. பெரிய நட்பு. உவர் தான் என்னை இப்ப கொப்பியை ஏத்திவைக்கப் போறார்" என்ற லோகநாதனை இடைமறித்தான் சுமித்திரா. "ஐயோ. இப்படியெல்லாம் கதைக்காதேங்கோப்பா. உங்களை மாதிரி வசதி கிடைத்தால். அந்தாளும் படிச்சு உங்களைவிட நல்ல பதவிக்கு வந்திருக்கும். குடும்பக் கஷ்டத்தாலை அந்தாளுக்குப் படிக்கேலாமல் போச்சிது" என்ற சுமித்ராவை இடைமறித்தார் லோகநாதன். "ஓமோம். வறுமையில்லையெண்டால் துரை பெரிசாய்ப் படிச்சுக் கிழிச்சித்தானேயிருப்பார்? உவன்ரை தலைக்குள்ளை கிடக்கிற பொருள் சட்டி பானை செய்யத்தானப்பா உதவும்" என்றவாறு ஒருவிதமாய்ச் சிரித்தார் லோகநாதன். "உண்மைதான் இந்த உலகத்திலை உங்களைத் தவிர மற்ற எல்லாற்றை தலைக்குள்ளையும் அந்தப் பொருள்தான் கிடக்குது. இஞ்சை உங்கடை மகனைப் பார்த்தாலே தெரியிது அந்த நாளிலை நீங்கள் எப்படியிருந்திருப்பீங்களெண்டு. முக்கி முக்கிப் படிச்சாலும் முப்பத்தைஞ்சுக்கு மேலை எடுக்கிறானில்லை" என்றாள் சுமித்திரா சிரித்தபடி "சும்மா விசயம் விளங்காமல் கதைக்காதை அவன் என்ரை அடியில்லை உன்ரையடி. சரியா உன்ரை மூத்த கொண்ணனின்ரை சாயல் அப்படியே இருக்கிது பிறகு என்னெண்டு படிப்பு வரும்"? என்றார் லோகநாதன். உங்களுக்கு என்ரை அண்ணனைப் பற்றிக் கதைக்காட்டி சாப்பிட்டது செமிக்காதே? ஏன் என்ரை அண்ணைக்கு என்ன குறை ? எங்கடை குடும்பத்திலையே அண்ணை தான் கெட்டிக்காரன் எண்டு ஐயா அடிக்கடி சொல்லிறவர் "என்றாள் சுமித்திரா "ஓமோம். பெரிய ஐசைக் நியூட்டன் தான் உள்ளதுக்குள்ளேயே அவன்தான் கெட்டிக்காரன் எண்டால் மிச்ச ஆக்களின்ரை நிலைமையச் சொல்லவேணுமே" என்று சிரித்தார் லோகநாதன்"நாங்கள்

மொக்குகள் தான். பிறகென்னத்துக்கு பின்னாலும் முன்னாலும் திரிஞ்சு என்னைக் கட்டினனீங்கள்? " "என்றாள் சற்றே மாறுபட்ட தொனியில் "சரி சரி உந்தக் கதையளை விட்டிட்டு இஞ்சை வா. கொஞ்சம் குழம்பு விடு. என்ன சொன்னாலும் உன்ரை சமையலை ஒருதரும் அடிக்கேலாது. இதுக்காகவே? அடுத்த சென்மத்திலையும் உன்னைத்தான் நான் கட்டுவன் என்றவாறு சுமித்திராவின் முகத்தைப் பார்த்தார் லோகநாதன் "அங் சோறு அப்படியே கிடக்கிது வடிவாய்ச் சாப்பிடுகோ" என்றவாறு குழம்பை விட்டாள் சுமித்திரா "உவன் பாவி அகால நேரத்திலை வந்திருக்கிறான் ஏதும் காசு கீசு கடன் கேக்க வந்திருக்கிறானோ தெரியேல்லை" என்றவாறு லோகநாதன் சோற்றைப் பிசைந்து வாயில் வைத்தார். "நீங்களென்னப்பா சாத்திரமே பாக்கிறீங்கள்? சரி அப்படித்தான் கடன் கேட்டிட்டார் எண்டால் அதுக்கென்ன? முடிஞ்சால் குடுக்குறது. "சுமித்திரா எக்கவுண்டன் சதீஸ்வரமூர்த்தியிட்டை முன்னூறு ரூபாய் கடன் வாங்கினவனாம் இன்னும் திருப்பிக் குடுக்கேல்லையாம். அதைக் கோயில் கணக்கில்லைதான் போடவேணும் "அந்த மனிசன் பேருக்கேற்ற மாதிரி ஒரு சதிகாரப் பேர்வழி எண்டு நீங்கள்தானே அடிக்கடி சொல்லிறனீங்கள் பிறகென்னத்துக்கு அந்தாளின்ரை கதையை ஒரு கதையெண்டு நம்பிறீங்கள்?" என்றாள் சுமித்திரா. "நான் சொல்லிறது உண்மைதான் எண்டாலும் இந்தக் கதை உண்மையாய்த்தான் இருக்கும் பண்டி குட்டி போட்டது மாதிரி அஞ்சு பெட்டையளைப் பெத்து வைச்சுக் கொண்டு. இந்தப் பீயோன் சம்பளம் என்னத்துக்குக் காணும்? உவனின்ரை மூத்த பெட்டையை அண்டைக்குக் கோயிலுக்குப் போற வழியிலை கண்டனான் அடையாளமே தெரியேல்லை அவன்ரை சைக்கிளும் சிமிட்டலும்" என்று நிறுத்தினார் லோகநாதன். "அவள் நல்ல கெட்டிக்காறி ஓ எல்லிலையும் நல்ல றிசல்ட் எடுத்தவள் இப்ப ஏ.எல். படிக்கிறாள். கொஞ்சம் வடிவாய் வெளிக்கிட்டுக்போனால் என்ன? நீங்கள் ஏன் அதைப் பாத்துப் பொறாமைப்படுறீங்கள்?" என்றாள் சுமித்திரா. "நானேன் அவளைப் பாத்துப் பொறாமைப்படவேணும்? ஏதோ வீக்கம் விரலுக்குத் தக்கதாயிருந்தால் சரி தான்" என்றவாறு சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழுந்தார் லோகநாதன். சாவகாசமாய்க் கையலம்பிவிட்டு. மெல்ல நடந்து வெளியே சென்றார்.

லோகநாதனைக் கண்ட உடனேயே அழகேசன் முகமெல்லாம் பல்லாய் சிரித்தவாறு "என்ன மச்சான் உன்ரை சாப்பாட்டைக் குழப்பிப்போட்டனே?" என்றார். லோகநாதன் செயற்கையாய் ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு "சச்ச. அப்படியொண்டுமில்லை என்ன திடீரெண்டு இங்கா லைப்பக்கம்" என்று நிறுத்தினார். "முதல்லை இதைப் பிடி மச்சான்" என்றவாறு தன் கையிலே இருந்த பார்சலை நீட்டினார் அழகேசன். "உதென்ன?" என்றவாறு அந்தப் பார்சலை வாங்கிக்கொண்டார் லோகநாதன். "இதுதான் மச்சான் டயபெடீஸ் மக். ஒரு சாதி மரத்திலை குடைஞ்சு தேத்தண்ணிக் கோப்பை மாதிரிச் செய்திருக்கிறது. படுக்கேக்கை கொஞ்சத் தண்ணியை இதிலை விட்டு வைச்சிட்டு விடிய எடுத்துக் குடிச்சால் பிளட் சுகரை நல்லாக்

கொன்றோல் பண்ணும். ரெண்டுமூண்டு வருசத்துக்கு முதல் என்ரை சின்னையா இதுபோலையொண்டு வைச்சிருந்தவர்.உனக்கு டயபெடீஸ் வந்த நாளிலையிருந்து எனக்கு சாப்பிடேக்கையும் தேத்தண்ணி குடிக்கேக்கையும் ஒரே உன்ரை நினைவுதான்...."திடீரென்று தான் டயபெட்டீஸ் நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அழகேசன் ஒப்புக்கு வந்து பார்த்துவிட்டுச் செல்லாமல் கூடவேயிருந்து தனக்குத் தேவையானவற்றையெல்லாம் செய்து தந்ததையும் இதமாய்ப் பேசித் தெம்பூட்டியதையும் லோகநாதன் நினைத்துக்கொண்டார். "உவன்" எங்களோடை படிச்ச கந்தசாமி இருக்கிறானெல்லோ? அவன் இப்ப கண்டிலை நல்லாயிருக்கிறான். அவன்ரை பேரிலை ஏழெட்டு லொறி ஓடுதாம். பிஸ்னெஸ் நல்லாய் நடக்கிதாம் போன மாதம் நான் கொழும்புக்குப் போனனானெல்லே? அப்ப கந்தனையும் ஒருக்கால் பாத்திட்டு வருவமெண்டு அவன்ரை கொழும்பு ஒப்பீஸ் பிறாஞ்சுக்குப் போனன் . அதென்ன ஒப்பீஸ் மச்சான் அதோடை பாக்கேக்கை எங்கடை பாங்க் கோழிக்கூடெல்லோ? நல்ல வேளையாய் அண்டைக்கு அவன் அங்கைதான் இருந்தான். ஏதோ மீற்றிங் நடந்துகொண்டிருந்ததாம், என்னைக் கண்ட உடனை அத்தனை பேர் நடுவிலை ஓடிவந்து கட்டிப் பிடிச்சு 'அழகு, எப்படியடா இருக்கிறாய்?' எண்டு கேட்டான் பிறகு என்னை 'இவர் மிஸ்டர் அழகேசன். என்ரை பிரண்ட் ' எண்டு அங்கை இருந்த எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினான். நான் கூனிக் குறுகிப்போனன் அண்டைக்கு முழுக்க அவனோடை தான் இருந்தனான். பழைய கதையெல்லாம் கதைச்சான். ஏன்ரா சும்மா அங்கையிருந்து கஷ்டப்படறாய் பேசாமல் குடும்பத்தோடை இஞ்சை வா. ஒரு குறையுமில்லை நான் பாக்கிறன். எனக்கு இப்ப உன்னைப் போல ஒரு நம்பிக்கையான ஆள்தான் தேவைப்படுகிறது" எண்டான். நினைச்ச உடனை என்னெண்டு வாறது? கொஞ்சநாள் பொறு யோசிச்சுச் சொல்லிறன் எண்டன் 'சரி. இப்ப உனக்கு என்ன உதவி வேணுமெண்டாலும் கேள்' எண்டான். எனக்கு உடனை உன்ரை ஞாபகம் தான் வந்தது. உன்னைப் பற்றிச் சொல்லி இந்த மக்கொண்டு எடுத்துத் தரேலுமா எண்டு கேட்டன் 'உது சின்ன விசயம் அது நான் பிறகு வாங்கி அனுப்பி விடிறன் இப்ப உனக்கு என்ன வேணும் எண்டு பிறகும் கேட்டான். எனக்கிப்ப ஒரு உதவியும் வேண்டாம் தேவையெண்டால் நான் பிறகு கேக்கிறன். நீ இந்த டயபெட்டீஸ் மக்கை மறக்காமல் வாங்கி அனுப்பினால் போதும் எண்டு சொல்லிபோட்டு வந்திட்டன். சொன்னது போலையே மகராசன் வாங்கி அனுப்பிப்போட்டான். இண்டைக்குத்தான் என்ரை கையிலை கிடைச்சிது.

"உடனையே உன்னட்டைக் கொண்டுவந்து தரவேணும் போலையிருந்திது. அதுதான் கொண்டோடிவந்தனான்". என்றான் அழகேசன். அழகேசனின் முகத்திலே பிரகாசித்த பூரிப்பு லோகநாதனை ஒரு கணம் நிலைகுலைய வைத்தது. தன்னை சுதாகரித்துக்கொண்டு ஏதோ சொல்ல வாயெடுத்தார் லோகநாதன். அதற்கிடையில், "சரி மச்சான். எனக்கு நேரமாகிது நான் வரட்டே? என்றவாறு எழுந்தான் அழகேசன். "இரு மச்சான். தேத்தண்ணி குடிச்சிட்டுப்

போவன்" என்றவாறு திரும்பினார் லோகநாதன். நான் இனித்தான் வீட்டை போய் சாப்பிடவேணும் அங்கை மனிசி என்னைப் பார்த்துக் கொண்டிருக்கும். "அழகேசன் லோகநாத னின் முகத்தைப் பார்த்து சிநேகபூர்வமாய்ச் சிரித்தவாறே தன் சைக்கிளை எடுத்தான். லோகநாதனின் கையிலே இருந்த அந்த மரக்குவளை இரும்பாய் மாறிக் கனப்பது போலிருந்தது. ஒரு தடவை தன் விழிகளை உயர்த்தி அழகேசனின் முகத்தை ஊடுருவிப் பார்த்தார். தன்னோடு அதிகமாக நெருங்கிப் பழகுகின்ற, மினு மினுப்பான மேல் தட்டு மக்களிடமெல்லாம் இல்லாத ஏதோ ஒன்று அந்த முகத்திலே ஆர்ப்பாட்டமில்லாத அந்தச் சிரிப்பிலே ஒளிந்துகொண்டிருப்பது போலி ருந்தது. அழகேசன் கேற்றைத் தாண்டி வெளியே செல்வதைப் பார்த்தபடியே தன் கையிலிருந்த அந்தப் பார்சலை அவிழ்த்து அதனுள்ளிருந்த மரக்குவளையை மெதுவாய் எடுத்தார் லோகநாதன் "நான் சாப்பிடேக்கையும் தேத்தண்ணி குடிக்கேக்கையும் உன்னைப் பற்றித்தான் மச்சான் நினைக்கிறனான்." அழகேசன் சொன்ன அந்த வார்த்தைகள் மீண்டும் ஒரு தடவை அவர் காதில் ஒலித்தன, அந்த மரக் குவளையை அப்படியும் இப்படியும் புரட்டிப் புரட்டிப் பார்த்தார் மூக்கின் அருகே கொண்டுசென்று அதனை மணந்து பார்த்தார். இன்னதென்று சொல்ல முடியாத ஒருவித மணம் அவரின் நாசித் துவாரத்தை ஊடுருவிச் சென்றது. லேகநாத னுக்குத் தன் வயது மெல்ல மெல்ல இறங்கி, தான் மீண்டும் பழைய பாடசாலைப் பருவத்தை அடைந்துவிட்டது போலிருந்தது.

## பயனுள்ள மருத்துவக் குறிப்புகள்

காயம்பட்டவரை அவசரத்தில் கண்டபடி தூக்கிச் செல்லக் கூடாது. படுக்க வைத்து மட்டுமே தூக்கிச் செல்ல வேண்டும். ஒருவேளை தண்டுவடம் பாதிக்கப்படாமல் இருந்து, நீங்கள் உடலை மடக்கித் தூக்குவதன் மூலம் அது பாதிப்படையலாம். உடல் பாகங்கள் செயல் இழந்து, நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிடும்.

எலும்பு முறிவு ஏற்பட்டால், எக்ஸ்-ரே எடுத்துப் பார்க்காமல் குத்துமதிப்பாக கட்டுப்போட்டு கொள்ளாதீர்கள். ஏனென்றால், எலும்புகள் கோணல்மாணலாக சேர்ந்துகொள்ளவும், தசைகள் தாறுமாறாக ஒட்டிக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. இதனால் கால்கள் கோணலாக, குட்டையாக மாறக்கூடிய ஆபத்து இருக்கிறது.

பிஸியோதெரபி என்பது இயற்கை வலி நிவாரணி. மாதக் கணக்கில் வலி நிவராணி மாத்திரைகள் சாப்பிடுவதன் மூலம் குணமாகும் பிரச்சினையை, வாரக் கணக்கிலேயே குணமாக்கிவிடும்.

# ஈழம் தந்த கொடை

## போற்றுதற்குரிய பேராசான் மாமனிதர்

# கவிஞர் நாவண்ணன்

**(12ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு. 15, ஏப்ரல்)**

சூ.கமலேஷ்



"ஈற்றில் வீழ்துயிர் விடும்வரை தமிழினைப் போற்றும் பேற்றினை யானடையேனோ.." எனத் தமிழைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டவர்... ஈழ விடுதலைப் போர் வரலாற்றில் ஈழத்து எழுத்தாளர்கள் என்ற பட்டியலில் தனக்கென ஓரிடத்தைப் பிடித்திருந்தவர் தான் சூசைநாயகம் என்ற இயற் பெயரைக் கொண்ட கவிஞர் மாமனிதர் நாவண்ணன். நாவண்ணன் என்றால் இப்படித்தான் இருப்பார் என்று எல்லோ ராலும் இனங்காட்டக் கூடியவராக உருவத்திலும் குணத்திலும் தனக் கென்று ஒரு தனித் தன்மை கொண்ட வராக விளங்கினார். காற்சட்டை, நீண்ட மேற்சட்டை, சற்று வளர்ந்திருந்த நரைத்த தாடி, மூக்குக் கண்ணாடி, புலவர்களுக்கே உரிய பாணியில் அடிக்கடி மெல்லும் வெற்றிலை, பெரும்பாலும் தோளில் தொங்கும் ஒரு பை.. இவை அவரின் மாறாத உருவ அடையாளங்கள் என்றால்... எப்போதும் நகைச்சுவையான பேச்சு. நீண்ட காலம் கோபங்களை வைத்திருக்க முடியாமல் விரைவில் மன்னித்து மறக்கும் பண்பு, அவமதிப்பையும் அநீதியையும் கண்டால் பொங்கியெழும் ரௌத்ரம், "நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே" எனும் புலவர்களுக்கேயுரிய துணிச்சல், தமிழின் மீதும், தமிழீழத்தின் மீதும் கொண்டிருந்த பற்று என்பன அவரது அகத்தை அடையாளம் காட்டும் குணங்களாக இறுதி வரைக்கும் மாறாதிருந்தன. குடும்ப வாழ்க்கையில் இவர் தன் மனைவிக்கு ஒரு நல்ல வாழ்க்கத்துணையாகவும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியான ஒரு நல்ல தகப்பனாகவும் வாழ்ந்தவர். எப்போதும் நகைச்சுவையாகப் பேசும் இவருடைய குடும்பத்தில் எப்போதும் ஒரு கலகலப்பு இருக்கும். பிள்ளைகளோடு ஒரு நல்ல தந்தையாக மட்டுமன்றி, நல்லதொரு நண்பனாகவும் பழகியவர்.

இயற்கையிலேயே பல்திறன் வாய்ந்தவராக, சிறுவயது முதல் கவிதை, நாடகம், இசை, ஓவியம் மற்றும் சிற்பம் போன்ற அனைத்துக் கலைகளிலும் திறன் வாய்ந்தவராக, ஒரு பன்முகக் கலைஞனாகத் திகழ்ந்தார். எனினும் அவர்

அதிகமாகப் பிரகாசித்தது ஒரு கவிஞராகவும் எழுத்தாளருமாகவே. இவரது சிற்பக் கலையின் ஆர்வத்தைக் கண்டு, அருட். சகோதரர் ஹில்லரி அவர்களின் ஊக்குவிப்பால் 1984ல் அமரர் அருட் சகோதரர் டிலாசால் அவர்களின் உருவச் சிலையை செதுக்கினார். இச்சிலை இன்றும் மன்னார் பட்டினத்தில் மாதா கோயில் வளாகத்தில் இருப்பதைக் காணலாம். இதன் பின்னர், சில தேவாலயங்களுக்குத் தேவையான உருவச் சிலைகளையும், விடுதலைப் புலிப் போராளிகளின் உருவங்களையும் அவர் செதுக்கினார். கற்சிலை மடுவில் நிறுவப் பட்டிருந்த பண்டார வன்னியன் சிலை, ஆலங்குளத்தில் நிமிர்ந்து நின்ற கரும்புலி போர்க்கின் சிலை, கிளிநொச்சி 155ஆம் கட்டையில் நிறுவப் பட்டிருந்த மாலதியின் சிலை, மற்றும் முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியில் நிறுவப்பட்டிருந்த மீரா சிலை என்பன ஆக்கிரமிப்பாளர்களினால் அழிக்கப் பட்டிருந்தாலும், இன்றும் வன்னி மக்களின் மனக் கண்களிலிருந்து மறைந்திரா...

அவ்வப்போது இறந்தவர்களின் படங்கள், கருத்தோவியங்கள் என தேவைக்கேற்ப ஓவியங்களை வரைந்து அத்திறமையையும் எண்பித்து வந்தார். இவர் நூல்கள் வடிவில் மாத்திரமன்றி, போராட்டத்திற்கான தன் கருத்துக்களையும் தமிழ் இலக்கியக் கருத்துக்களையும் புலிகளின் குரல் வானொலி மற்றும் நிதர்சனம் போன்ற ஊடகங்களினூடாகவும் வெளிப்படுத்தினார். ஈழத்துப் பாடல்களில் "என் இனமே என் சனமே என்னை உனக்குத் தெரிகிறதா" என்ற பாடலோடு அறிமுகமானார். இன்றும் பலரது உள்ளங்களில் நினைக்கும் போதே இனிக்கின்ற "ஒட்டி ஓரா மீன் பிடிக்க.." என்ற பாடலை எழுதியவரும் இவரே. தாமாகச் சென்று மற்றவர்களிடம் திணிக்காது, தேவையேற்படும் மற்றவர்கள் தாமாக அவரிடம் வந்து கேட்டால் மட்டுமே பாடல்களை இவர் எழுதுவதுண்டு. இதுவே இவர் அதிகப்படியான பாடல்களை எழுதாமைக்குக் காரணமாக அமைந்தது. இவர் தன்மானம் மிக்க தமிழனாக, யாரிடமும் தலை குனியாத தமிழனாக வாழ வேண்டும் என்பதில் இறுதிவரை உறுதியாக இருந்தார். இளமைப் பராயத்தில் அரச உத்தியோகம் பார்க்க மாட்டேன் என்றும், சிங்கள மொழியைக் கற்க மாட்டேன் என்றும் வைராக்கியத்தோடு இருந்த இவர் இறுதிவரை அரச உத்தியோகம் செய்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களையும் அலட்சியம் செய்தார். எனினும் மொழியின் மீது தன் வெறுப்பைக் காட்டுவது தவறு என்றுணர்ந்தபோது ஏனைய மொழிகளையும் கற்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இதனால் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சரளமாக உரையாடக் கூடியவராக இருந்தார். கற்றலை நேசித்த இவர் மற்றவர்களது கல்வியையும் ஊக்குவிப்பவராக இருந்தார். மற்றவர்களிடம் உள்ள திறமையை வெளிப்படையாகப் பாராட்டுவதோடு அவர்களுக்கு உற்சாகமூட்டுவார். இத்தகைய இவரது பரந்த மனப்பாங்கு ஈழத்தில் பல இளைய கவிஞர்களையும் ஊக்குவித்தது. திறமையையும், தன் கருத்தை எப்போதும் வெளிப்படையாகக் கூறும் துணிச்சலையும், நாட்டுப் பற்றையும் கண்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு

வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் அன்பையும் பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டார். அவ்வாறே தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களைப் பல நிகழ்வுகளின் போது இவர் சந்தித்த போதும், தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசி அவரது அன்பைப் பகிர்ந்து கொள்ளும் மகாபெரிய பாக்கியம் இவருக்குக் கிடைத்ததமையானது, இவரது தமிழ் உணர்வையும், தாயகப் பற்றையும் சான்று பகர்கின்றது என்றால் மிகையாகாது.

இவரது இலக்கியங்கள் அனைத்தும் சமூக, போராட்ட மற்றும் சமய இலக்கியங்களாகவே இருந்தன. போட்டி ஒன்றில் தன் 16 வயதில் "அவளும் ஏழைதானே" என்ற சிறுகதைக்காக ஒரு பத்திரிகையில் முதற் பரிசு பெற்ற நாவண்ணன் அவர்களின் இலக்கியப் பயணம் "சுனாமிச் சுவடுகள்" என்ற நூலோடு முற்றுப் பெற்றது. தனது பதினாறாவது வயதில் எழுத்துத் துறையில் காலடி வைத்த இவர் தன்னிடம் உள்ள வளங்களைக் கொண்டு 15 நூல்களை மட்டுமே வெளியிட முடிந்தது. மேலும் எழுதி முடித்த 4 நூல்கள் அச்சேற முடியாத நிலையில் கையெழுத்துப் பிரதிகளாவே இறுதிவரையும் இருந்தன. அவரது எழுத்துக்கள் பலவும் நூலுருப் பெறுவதற்கு அவரது பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை என்பதே உண்மை. தனது நாவன்மையால் நாவண்ணன் என்ற பெயர் கொண்ட இவர் மேடைப் பேச்சுக்களிலும் கதாப் பிரசங்கங்களிலும் தன் பெயரை நாட்டியிருந்தார். இவரது கவிதைகள் யாவும் மரபு சார்ந்த கவிதைகளாக, சிறு பிள்ளைகளையும் கூடக் கவரக் கூடிய வகையில் எளிய மொழிநடையும் எதுகை மோனை தப்பாதவையாகவும் காணப்பட்டன. தேசிய மட்டத்திலான போட்டி ஒன்றில் "முல்லை அலைவிடு தூது" என்ற தூதுப் பிரபந்தத்தை எழுதிப் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. கவியரங்கங்களிள் நாவண்ணனின் கவிதைகளை இரசித்து வியக்காதவர்கள் இல்லை.

இவருடைய நூல்கள் பெரும்பாலும் வரலாற்றை ஆவணப் படுத்தும் நூல்களாகவே இருந்தன. குறிப்பாக தமிழன் சிந்திய இரத்தம், புத்தளத்தில் இரத்தக் களம், தீபங்கள் எரிகின்றன, நினைவாலயம், அக்கினிக் கரங்கள், குருதியில் நனைந்த திருவடிகள், கரும்புலி காவியம், சுனாமிச் சுவடுகள் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

இளமைப் பருவத்தில் தன்னுடைய அதிகமான நேரத்தை மன்னார் நூலகத்தில் தான் செலவழித்தார். அந்தளவிற்குத் தேடல் உள்ளவராக இவர் காணப்பட்டார். இந்தத் தேடலே பிற்காலத்தில் வரலாறுகளை ஆவணப்படுத்தும் நூல்களை எழுத உதவின. 2003 ம் ஆண்டு புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று தமிழைப் பெருமைப் படுத்தும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கிருந்த சில புலம் பெயர் தமிழர்கள் தாம் பட்டு வந்த அவலங்களைப் பற்றி அவரிடம் பேசிய போது அவற்றையும் ஆவணப்படுத்த வேண்டும் என்ற ஆவலுடன் தாயகம் திரும்பியவர், அதைச் செய்து முடிக்க வேண்டும் என்று இறுதி வரை தவித்துக்

கொண்டிருந்தார். இதற்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக மீண்டும் ஐரோப்பிய நாடுகளுக்கு சில புலம்பெயர் உறவுகளின் அனுசரணையோடு செல்வதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டார். ஆனால் அதைப் பொறுக்க முடியாத காலன் விசாவுக்கு விண்ணப்பித்து விட்டுக் காத்திருந்தவரை, தான் அணைக்கக் காத்திருந்தான் போலும். எழுத்துலகில் இவர் தொடர்ந்த அயராத உழைப்பின் மிகுதியால், தனக்குள்ளே ஏற்பட்ட நோயைக் கூட இனங்காணாதவராக அல்லது அதுபற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாதவராக இருந்தமையால், அவரது ஈரல் பகுதியில் ஏற்பட்ட கிருமித்தொற்று மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்கியது. இது இவர் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கண்டறியப் பட்டது. ஆனால் துரதிஸ்டவசமாக அவரது நோய் கண்டறியப்பட்ட போது அவரது ஈரலில் 80 வீதம் செயலற்றிருந்தது. ஆனாலும் மிகுதி 20 வீதமாக செயற்படும் ஈரலுடன் அவர் வாழ்ந்த அடுத்த ஆண்டுப் பகுதியிலும் அவர் தனது பணியிலிருந்து ஓயாதவராக, தொடர்ந்து எழுத ஆவலுற்றார். கோமா நிலையில் இருந்து எட்டு நாட்களின் பின் மீண்ட அவர் தன் கைகள் எழுத முடியாத நிலையிலும், கொழும்பு அப்பல்லோ மருத்துவமனைப் படுக்கையில் கிடந்தவாறே, தன் வாயால் சொல்லச் சொல்ல, அவருடைய மனைவி எழுதியதே "சுனாமிச் சுவடுகள்" என்ற இவரது இறுதி நூல்.

2006 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15ம் திகதி காலையில் கொழும்பு அப்பல்லோ மருத்துவமனையில் நோயின் மத்தியிலும் மிகவும் உற்சாகமாகவே காணப்பட்டார். அன்றய தினம் இவரது பால்ய நண்பர்களான திரு. மைக்கல் யோசப், திரு அலெக்ஸண்டர் பெரேரா ஆகியோர் இவரை மருத்துவமனைக்குச் சென்று சந்தித்திருந்தனர். இவர்களுள் அலெக்ஸ் என்பவர் 25 வருடங்களின் பின் தன் நண்பனை சந்தித்திருந்தார். கண்ட மாத்திரத்தில் இருவரும் கட்டி அணைத்து முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் சிந்தினர். இது தான் நாவண்ணன் என்ற அத்தியாயம் முடிவடையும் நாள் என்று அறியாமலே. நண்பர்கள் போகும் வரையிலும், அதன் பின்னரும் கூட தன் மனைவியுடனும் உற்சாகமாகவும், நகைச்சுவையாகவும் குறும்புத்தனமாகவும் பேசிக் கொண்டிருந்தார். அவரது வயிறு உப்பியிருந்ததால் நீர் குத்தி எடுக்க வேண்டும் என வைத்தியர்கள் தெரிவித்திருந்ததன்படி மாலை 5.30க்கு அவரை சிகிச்சை அறைக்கு அழைத்துச் சென்றனர்... அவர் அந்த அறைக்குள் பணியாளர் ஒருவரால் அழைத்துச் செல்லப்பட்டு கதவு மூடிக் கொண்ட அந்தத் தருணம்... அது தான் அவர் வெளியுலகை.... தன் மனைவியைப் பார்த்த கடைசி நிமிடம்... அதன் பின்னர் நாவண்ணன் என்ற பெரும் ஈழத்து எழுத்தாளனின் உயிரற்ற உடல்... மை தீர்ந்து போன பேனாவாக வெளியில் கொண்டு வரப்பட்டது... மன்னார் மண் தன் மடியில் பிறந்த ஒரு கலைஞனை இழந்ததும், ஈழத்தமிழினம் ஒரு பெரும் பற்றாளனை இழந்ததும் உண்மை தான்... ஆனால் தமிழ் வாழும் வரை நாவண்ணனின் தமிழ் மூச்சு வாழும் என்பது அதிக நிச்சயம்!!!

# தொழிலாளர் தினம்



உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் மே முதல் தேதியை மே தினம் என்றும் தொழிலாளர் தினம் என்றும் கொண்டாடி மகிழ்கிறார்கள். 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 12 முதல் 18 மணி நேரம் வரை வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. இதற்கு எதிரான குரல்கள் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் தொடங்கின. இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் (Chartists). சாசன இயக்கம் 6 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது 10 மணி நேர வேலை என்ற கோரிக்கை.

1830 ஆம் ஆண்டு, பிரான்சில் நெசவுத் தொழிலாளர்கள் தினமும் 15 மணி நேரம் உழைத்து வந்தனர்.

இதனை எதிர்த்து அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 1834 இல் ஜனநாயகம் அல்லது மரணம் என்ற வாசகத்தை முன்வைத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால், இது தோல்வியில் முடிந்தது. ஆஸ்திரேலியா விலுள்ள மெல் போர்னில் கட்டிடத் தொழிலாளர்கள் 1856 இல் முதன்முதலாக 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்தனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றனர்.

1896 ஏப்ரலில் லெனின் மே தினத்திற்காக எழுதிய சிறுபிரசுரத்தில், ரஷ்யத் தொழிலாளர்களின் நிலைமை குறித்து விரிவாக அலசினார். மேலும், ரஷ்யத் தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டம் அரசியல் போராட்டமாக எழுச்சி கொள்ள வேண்டும். என்பதையும் வலியுறுத்தினார். தொழிலாளர்களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது எனலாம்.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து, அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு என்ற இயக்கம் உருவாக்கப் பட்டது. இந்த இயக்கம் 1886, மே 1 ஆம் நாள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இந்த இயக்கமே மே தினம் தோன்றக் காரணமாக இருந்தது எனலாம்.

50ஆம் பக்கம் பார்க்க

# சேதன விவசாயம்

## Organic Farming



ஸ்ரனி அன்ரனி

சேதன விவசாயம் என்பது விவசாயப் பண்ணையை உயிருள்ள ஒரு தொகுதியாகக் கருதி, சூழலுடன் இசைவான முறையில், இயற்கையாக கிடைக்கும் உள்ளீடுகளைப் பயன்படுத்தி, பொருளாதார ரீதியில் பயனளிக்கக்கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதை நோக்கமாக கொண்ட ஒன்றிணைந்த விவசாய முறையாகும். இவ்விவசாய முறையின் அடிப்படைத் தத்துவமானது, பண்ணையில் ஆரோக்கியமானதும் உயிர்வாழ்கின்றதுமான மண்ணை உருவாக்குவதன் மூலம் ஆரோக்கியமான பயிர்களை உற்பத்தி செய்வதாகும்.

விவசாய இரசாயனங்கள் பயன்படுத்துவதால் சுற்றாடற் சமநிலை இல்லாதொழிந்தமை சுற்றாடற் தொகுதிக்கும், மனிதர்களிற்கும் ஏற்பட்ட மேற்குறிப்பிட்ட ஆபத்துகளைக் குறைப்பதற்கும், நீண்ட கால அடிப்படையில் அவற்றை இல்லாதொழிப்பதற்கும் சேதன பயிர்ச்செய்கை மிகவும் அத்தியாவசியமானது என இனங்காணப்பட்டுள்ளது. மண், தாவரங்கள், விலங்குகள், சுற்றாடல் என்பனவற்றிற்கிடையேயான சுற்றாடலிற்கு ஆபத்தில்லாத வகையில் இயற்கையாக ஏற்படும் தொடர்பினை குறிப்பிட்ட அளவிற்கேனும் திரும்பக் கட்டியெழுப்புவதாகும். இயற்கையான சுற்றாடற் சுழற்சியை மீளத்தூண்டல், அவற்றிற்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவதை விட சிறப்பானதாகும். விசேடமாக சுற்றாடலை மாசுபடுத்தல், மனிதர்களின் ஆரோக்கியம் என்பன தொடர்பாக அத்தியாவசியமானவை என இனங்காணப்பட்டுள்ளன.

பெரும்பாலானோரிடையே நிலவும் ஆரோக்கியமான உணவைப் பெற்றுக்கொள்வதற்கான அவசியம், சுற்றாடலை மாசுபடுத்தாது பாதுகாத்தல், நிலைபேறாக மண்ணின் வளத்தைப் பாதுகாத்தல், பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைகளை தற்போதைய நவீன முறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளமை என்பனவற்றின் காரணமாகவே சேதன விவசாயம் இன்று பிரபல்யமடைந்து வருகின்றது. இதனால் சேதன விவசாய விளைபொருட்களிற்கு அதிக விலையைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான காரணிகளினால் உலகளாவிய ரீதியில் இன்று சேதன விவசாயம் நன்கு பரவி வருகின்றது.

சேதன விவசாயிகள் திடகாத்திரமான பயிர்களை உற்பத்தி செய்வதற்காக தமது பண்ணையிலுள்ள மண்ணை நன்கு பரிபாலிக்க வேண்டும். இங்கு மண்ணிலுள்ள உயிர் அங்கிகளுக்கு போசணை ஊட்டுவதன் மூலம் வளமான மண்ணை உருவாக்குவதே இவ் விவசாய முறையின் பிரதான நோக்கமாகும். நுண்ணங்கிகளின் அதிகரித்த செயற்பாட்டின் மூலம் மண்ணிலிருந்து தாவரங்களுக்குத் தேவையான போஷணையின் அளவு அதிகரிக்கும். அத்துடன் சேதன பசளைகளின் அதிகரித்த பாவனை மூலம் மண்ணில் காற்றூட்டல் அதிகரிப்பதோடு ஈரலிப்புத்தன்மையையும் அதிகரிக்க செய்யும்

சேதன விவசாய முறையில் மேற்கொள்ளப்படும் சில நடைமுறைகள்

- பயிர்வகைகளை மாற்றி மாற்றி நடல் (சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை)
- விலங்கு, கால்நடை உரப்பாவனை
- கூட்டெருப் பாவனை
- இலைப்பசளைப் பாவனை (பசுந்தாட் பசளை)
- அவரை இனப் பயிர்களை வளர்த்தல்
- பல்லின பயிர்களை வளர்த்தல்
- உயிரியல் முறையில் பீடைகளை கட்டுப்படுத்தல்
- இயந்திரங்கள் மூலம் களைகளை கட்டுப்படுத்தல்

சேதனப் பயிர்ச்செய்கையில் பயன்படுத்தக் கூடிய பல்வேறு வகையான சேதனப் பொருட்கள் உள்ளன. பெரும்பாலும் உரங்களாகவும், மண்ணை உருவாக்கும் பொருட்களாகவும், விவசாய இரசாயனங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் சில பொருட்களில் மேற்குறிப்பிட்ட மூன்று அம்சங்களும் அடங்கியிருக்கலாம். உரங்களாக பண்ணை எருக்கள், கூட்டெரு, பசுந்தாட் பசளை, தாவரப் பிரித்தெடுப்பு என்பனவற்றைப் பயன்படுத்த முடியும். இதேநேரத்தில் இவற்றின் மண்ணை உருவாக்கும் வல்லமை, பீடை நாசினி வல்லமை, பதிய வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் வல்லமை என்பனவும் அடங்கியிருக்கலாம். இவை அனைத்தையும் விட மிகவும் முக்கியமானது சேதன உள்ளீடு என்பதாகும். இவை அனைத்திலும் குறிப்பிடத்தக்களவான தாவரப் போசணைகள் உள்ளன. இவற்றை தேவைக்கேற்ப கலவை செய்தல், ஒழுங்குபடுத்தல் என்பனவற்றின் மூலம் நிறைவான பசளைப் பாவனைக்கு வழிகோலும். இவை அனைத்தும் மண்ணிலுள்ள சேதனப் பொருட்களின் அளவு அதிகரிப்பதற்கு உதவுவதால், மண் வளமும் நிரந்தரமாகப் பாதுகாக்கப்படும்

**சேதன விவசாயப் பண்ணையில் பீடைகளின் கட்டுப்பாடு**

சேதன விவசாயப் பண்ணையின் அடிப்படைத் தத்துவமானது தாவரங்களுக்கு உயர் போசணையைப் பெற்றுக்கொடுத்து அதன்மூலம் தாவரங்களின் வீரியமான வளர்ச்சிக்கு உதவுவதன்மூலம் பீடைகளினால் ஏற்படும்

சேதத்திலிருந்து பாதுகாப்பதாகும். இம்முறையில் மேற்கொள்ளப்படும் சில செயற்பாடுகளாவன:

பாதுகாப்புப் பயிர்களை நடல்

தொடர்ச்சியாக பயிர்களை மாற்றுதல்

பல்லின (mixed crops) பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்

பல் வகையான மண் உயிரினங்களை பாதுகாப்பதோடு சூழலுக்கு நன்மை பயக்கும் பூச்சிகளினதும் பறவைகளினதும் உதவியினால் பீடைகளை ஒழித்தல்

பீடை கட்டுப்பாட்டு முறை தோல்வியடையும் போது இரை கவ்விகளின் பாவனை மூலம் அவை பரம்பலடைவதை தடுத்தல், பொறி அல்லது தடைகளை பாவித்தல்

இவ்வனைத்து முறைகளின் மூலமாகவும் கட்டுப்படுத்த முடியாமல் போகும்போது மாத்திரம் இயற்கையான அல்லது சேதன பீடை நாசினிகளை (வேப்பம் விதை, புகையிலை, காஞ்சோந்தி, இஞ்சி, மிளகாய், மிளகு, வெள்ளைப்பூடு போன்றவற்றில் இருந்து தயாரித்த திராவகங்களை) பயன்படுத்தலாம்.) சேதன விவசாயத்தில் பீடைகளை கட்டுப்படுத்த வேப்பம் விதை திராவகம் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றது. இதன் பயன்பாட்டின் மூலம் சேதன விவசாயத்தில் தீங்குசெய்யும் அனேகமான பூச்சி புழுக்களை கட்டுப்படுத்தலாம். அதிலும் விசேடமாக இலைகளுக்குத் தீங்கு செய்யும் கம்பளிப் பூச்சிகளை கட்டுப்படுத்த மிகச்சிறந்த வழியாகும்.

வேப்பம் விதை திராவகத்தை தயாரிக்க உலர்ந்த வேப்பம் விதையை நன்கு உடைத்து தூளாக்கிய பின் அதனை 1 லீற்றர் நீரில் இரவு முழுவதும் ஊறவிடவும். மறுநாள் காலையில் மெல்லிய துணியினால் வடித்து விசிறும் தாங்கிகளில் நிரப்பி பயிர்களுக்கு விசிறலாம். திராவகத்தை விசிறுவதற்கான மிக உகந்த நேரம் அதிகாலை அல்லது மாலை வேளைகளாகும். இத்திராவகத்தின் தன்மை சூரிய ஒளியினால் பாதிப்படையக்கூடுமாகையால் சூரிய ஒளி செறிவாகவுள்ள பகல் வேளைகளில் பயன்படுத்துதல் தவிர்க்கப்படவேண்டும். இத்திராவகத்தை தேவைக்கு ஏற்ப 2 வாரங்களிற்கு ஒரு முறை பயன்படுத்தலாம். இத்திராவகத்தின் பயன்பாட்டின் மூலம் கோவா பயிர்செய்கையில் இலைகளை தாக்கியழிக்கும் பூச்சிகள் (c+k; Diamond back moth) திருப்திகரமாக கட்டுப்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

**சேதன விவசாயப் பண்ணையில் களைகளின் கட்டுப்பாடு**

சேதன விவசாய முறையில் களைகளை முற்றுமுழுதாக பண்ணையில் இருந்து அகற்றாது அவற்றைக் கட்டுப்படுத்துவதே பிரதான நோக்கமாகும். களைகளை கட்டுப்படுத்தல் என்பது பயிர்களின் வளர்ச்சியிலும், விளைச்சலிலும் களைகளின் பாதிப்பால் ஏற்படும் தாக்கத்தினை குறைப்பதாகும்.சேதன விவசாய முறையில் செயற்கை களை நாசினிகளின் பயன்பாடு தவிர்கப்படவேண்டும். இதற்கான காரணம் களைநாசினிகளும் பீடை நாசினிகள் போன்று சூழலுக்கு தீங்கை

விளைவிக்கக் கூடியன. சூழலுக்கு நன்மை பயக்கும் பூச்சி இனங்களுக்கு புகலிடம் அளிக்கும் தாவரங்களும் களை நாசினிகளின் பாவனையால் அழிக்கப்படலாம். பின்வரும் செயற்பாடுகள் மூலம் சேதன விவசாய முறையில் களைகள் மட்டுப்படுத்தப்படலாம்.

சுழற்சிமுறை பயிர்ச்செய்கை

களைகளை கையால் அல்லது இயந்திரங்களின் உதவியால் அகற்றுதல்

மூடுபயிர்களை வளர்த்தல்

பயிர்களை நெருக்கமாக நடல்

மூடுபடைகளை பயன்படுத்தல்

காலத்திற்கு காலம் மண்ணை கிளறிவிடல்

**மூடுபடைகளை பயன்படுத்தல்**

மூடு படைகளைப் பயன்படுத்தல் என்பது பல்வேறு விவசாயக்கழிவுகள் பண்ணைக்கழிவுகள், அறுவடை மீதிகள் என்பவற்றைக் கொண்டு விவசாய நிலத்தை மூடிவிடுவதாகும்.

**இயற்கையான கட்டுப்பாடு**

சேதன விவசாய முறையில் பல்வேறு வழிகளில் இயற்கையாக நோய்களும் பீடைகளும் கட்டுப்படுத்தப்படலாம். வீரியமான பயிர்கள் நோய்களாலும் பீடைகளாலும் மிகக்குறைவாகவே பாதிக்கப்படும் இம்முறைகளில் பின்வருவனவும் அடங்கும்.

02. மிகச் சுத்தமான விதைகளையும், நடுகைப் பொருட்களையும் தெரிவு செய்தல், பயன்படுத்தல்

03. உகந்த முறையில் உயிரினங்களிற்கிடையே அந்நியோன்னிய உறவு ஏற்படக் கூடியவாறு பயிர்ச்செய்கைத் தொகுதியை மேற்கொள்ளல்

04. நிறைவான முறையில் உரங்களை இடல்

05. சிறந்த நீர் முகாமைத்துவத்தின் மூலம் உகந்த அளவிலான ஈரப்பதனைப் பராமரித்தல்

06. இயற்கைப் பீடை எதிரிகளைப் பாதுகாத்தலும், அவற்றின் எண்ணிக்கையை அதிகரித்தலும்

07. பொருத்தமான பயிர்ச்செய்கைக் காலத்தையும், பயிர்ச்செய்கைக்கான ஓய்வு காலத்தையும் தெரிவு செய்தல்.

08. நோயால் பாதிக்கப்பட்ட தாவரங்களைத் தெரிவு செய்து அகற்றல்

09. விதை வர்க்கங்களை இயற்கையான தாவர பிரித்தெடுப்புகளில் இட்டு

ஆயத்தம் செய்தல்

10. இயற்கையான பீடைநாசினிகளைப் பயன்படுத்தல்

11. பொறிகளை வைத்தலும், கையால் அகற்றலும்

12. குறிப்பிட்ட நோய்களுக்கும் பீடைகளுக்கும் இயற்கையாகவே எதிர்ப்பு சக்தி கொண்ட பயிரினங்களை தெரிவு செய்து நடல். உள்ளூர் இனப் பயிர்கள் பொதுவாக அறிமுகப்படுத்தப்பட்ட இனங்களைவிட நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கொண்டதாகும்.

13. உரிய காலத்தில் பயிர்களை நடுவதன் மூலம் பீடைகள் அதிகம் தாக்கும் காலத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

14. பீடைகள் அதிகம் விரும்பாத ஏனைய தோழமைப் பயிர்களுடன் கலந்து நடல்

15. நோய்களையும் பீடைகளையும் சரியான முறையில் அடையாளம் காணல். இது விவசாயியின் நேரத்தை மீதப்படுத்துவதோடு தவறுதலாக நன்மை பயக்கும் பூச்சியினங்களை அழிப்பதையும் தவிர்க்க உதவும்.

16. சுழற்சிமுறை பயிர்ச்செய்கை மூலம் பீடைகளின் வளர்ச்சி வட்டத்தை தகர்ப்பதோடு பீடைகள் அடுத்த போக பயிருக்கு பரவுவதையும் தவிர்க்கலாம்.

17. பண்ணையை சுற்றி பீடைகளை பிடித்து உண்ணும் இயற்கை இரைகௌவிகளுக்கான வாழ்விடங்களை உருவாக்குதல்.(தத்துக்கிளி, நத்தை, கறையான், கம்பளிப்பூச்சி வர்க்கங்கள் என்பன பீடைகளிற் சிலவாகும். லேடி பேர்ட், சிலந்தி, நில வண்டுகள், ஒட்டுண்ணிக் குளவிகள், கும்பிடுதட்டான் என்பன இரைகௌவிகளாகும்.)

கவனமான திட்டமிடலுடன், கிடைக்கப்பெறும் சகல தொழில் நுட்பங்களையும் பயன்படுத்துவதன் மூலம் பயிர்களுக்கு கிருமிநாசினிகள் விசிறுவதை தவிர்கலாம். இதற்கும் மேலாக பீடைகளின் தொல்லைகள் அதிகரிக்கும் போது மாத்திரம் இயற்கையான பீடைநாசினி தன்மை கொண்ட பொருட்களில் (மிளகாய், வெங்காயம், வெள்ளைப்பூடு, வேப்பம் விதை) இருந்து தயாரித்த தெளிகரைசல்களை பயன்படுத்தலாம்.

இவ்வாறாக இயற்கை முறைகளைப்பேணி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சூழலைப் பேணி இயற்கையைப் பாதுகாப்பதுடன் எதிர்கால சந்ததியினருக்கு நோயற்ற வாழ்வையும் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் பூமியின் நிலைத்திருத்தலையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்பது உண்மை.

# அதிர்ச்சி தரும்
# ஆய்வு முடிவுகள் !

டிவி நாடகங்களில் வரும் அழுகைகள், குமுறல்கள், ஒப்பாரிகள், உரக்கக் கத்திப் பேசுதல், சோக இசைகள் மற்றும் சாவு மேளதாள இசைகள் இவையெல்லாம் உங்கள் வீட்டில் இருக்கும் லக்ஷ்மி கடாஷத்தைச் சீர்குலைத்து கெடுத்துவிடும்.

இதனால் அபசகுனமான நிகழ்ச்சிகளின் காட்சிகள் ரீவி க்குள் நடந்தாலும் அதன் ஒளி ஒலி அதிர்வுகளின் நிகழ்வுகள் நமது வீட்டிற்குள்ளேயே நடப்பதால் குடும்பத்தில் பல பிரச்சனைகள் உருவாகும் என்பது அசைக்க முடியாத ஆன்மீக நம்பிக்கையாளர்களின் ஆய்வு ஆகும்.

இதனால் பல நோய்கள் வரலாம், வீட்டில் பணம் தங்காமல் போகலாம், வீண் செலவுகள் ஏற்படலாம் தொழில் நஷ்டம் ஏற்படலாம், என்று இப்படிப்பட்ட அதிர்ச்சி தரும் ஆன்மீக ஆய்வு முடிவுகள் ஒரு பக்கம் எச்சரிக்கை செய்கிறது..

அது சமயம் ஆன்மீக நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் அதிர்ச்சி தரும் மருத்துவ ஆராய்ச்சி ஆய்வு முடிவுகளாக உள்ளன.

ஆம், உங்கள் உடல் நலத்தையும் சீரழித்துவிடும் அதிர்ச்சி ரிப்போர்ட்...

இதனால் கண் பார்வை கோளாறில் ஆரம்பித்து மன இறுக்கம் மன அழுத்தம் மன நோய் வந்து... உடல் எடை அதிகரித்து.... இதன் தொடர்ச்சியாக... சர்க்கரை வியாதி, மாரடைப்பு, இருதயக் கோளாறு, ரத்த அழுத்தம், கழுத்து எலும்பு தேய்மானம், தலைசுற்றல், தலைவலி, மூளை மற்றும் நரம்பியல் சம்பந்தமான பிரச்சனைகள் வரும்...

இதற்கு எல்லாம் முக்கியமான காரணம்.... பிறரை எப்படிக் கெடுப்பது, அழிப்பது, துன்புறுத்துவது, கணவன் மனைவிக்குள் ஒருவரை ஒருவர் ஏமாற்றி கள்ளக்காதல் தொடர்பு எப்படி என்று கற்றுக்கொடுக்கப்படுகிறது....

குடும்பத்தினருக்குள் மாமியார் மருமகள் சண்டை, அண்ணன் தம்பி சண்டை சந்தேகப்படுவது, சகுனி வேலை பார்ப்பது, எல்லாம் கற்றுக் கொள்ளலாம்.

எப்படி லஞ்சம் பெறுவது! கற்றுக் கொள்ளலாம் அதோடு நேர்மையான அரசு

அதிகாரிகளை எப்படி லஞ்சம் வாங்கியது போல் திட்டமிட்டு மாட்டி விடுவது என்றும் கற்றுக் கொடுக்கப்படுகிற து பிறர் தொழிலை எப்படி கெடுப்பது, எப்படி நம்பிக்கைத்துரோகம் செய்வது என்பது எல்லாம் காண்பிக்கப்பட்டு மக்களுக்கு பழக்குவிக்கப்படுகிறது.



இவையெல்லாவற்றையும் விட பெரிய பேரிழப்பு உங்கள் அருமைக் குழந்தைகளின் விலை மதிப்பற்ற எதிர்காலம் பாழாக்கப்படுகிறது... இத்தனை பாதிப்புகள் தெரிந்தும் தொலைக்காட்சி நிறுவனங்கள் தங்கள் TRP ரேட்டிங் அதிகரித்திட சுய லாபத்துக்காக இப்படிப்பட்ட மக்களைச் சீரழிக்கும் டிவி சீரியல்கள் தயாரித்திட முக்கியத்துவம் தருகிறது..

தயவுசெய்து மக்களே, இது போன்ற கேவலமான நாடகங்களைப் புறக்கணியுங்கள்.. நாம் புறக்கணித்தால் தானே TRP ரேட்டிங் குறைந்தால் தொலைக்காட்சி நிறுவனங்கள் மக்களை சீரழிக்கும் சீரியல்களை தானே நிறுத்தி விடுவார்கள்.

எனவே உங்கள் விலைமதிப்பில்லா ஓய்வு நேரத்தை அன்பான குழந்தைகள் மற்றும் வீட்டில் உள்ள கணவன், மனைவி, பெரியவர்களோடும் சிரித்து பேசி பாசத்துடன் பழகி வாழ்க்கையை அனுபவியுங்கள். குறைந்த நேரம் நல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள் மற்ற நேரங்களில் நல்ல புத்தகங்களைப் படியுங்கள்.. கிடைக்கக் கூடிய பொன்னான நேரங்களில் பிறருக்கு நன்மை செய்யும் நல்ல காரியங்களிலும் ஈடுபடுங்கள்

இல்லையேல் வரும் பலன்களை நல்லதோ கெட்டதோ நீங்கள் தான் அவற்றை TV பார்த்து உருவாக்கினீர்கள் என்பதை உணர்ந்து அனுபவிக்க தயாராகுங்கள்..... அல்லதை விடுத்து நண்பர்களே நல்லதை பாருங்கள், கேளுங்கள் பேசுங்கள், சிந்தியுங்கள் வாழ்வில் எல்லாம் நல்லதாய் நடக்கும் .

வாழ்க வளமுடன்

தீதும் நன்றும் பிறர் தர வாரா நம்மை சுற்றி நடப்பனவற்றுக்கு நாமே பொறுப்பு........

எண்ணம் போல் வாழ்க்கை

# மனதை மயக்கும் மல்லிகைத் தோட்டம்

## புளியங்குளம் - மாதிரிப் பண்ணை

அ.நெலோமி



மலர்களில் மயங்காதோர் யாருளர்? கொள்ளை கொள்ளும் அழகும், மணமும் கொண்ட மலர்கள் தமிழரின் வாழ்வில் முக்கிய இடம் பிடித்துள்ளன. இலக்கியங்களில் 99 வகை மலர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழரின் வெற்றியிலும் தோல்வியிலும், பிறப்பிலும், இறப்பிலும், அவனது வாழ்வின் ஒவ்வொரு பருவங்களிலும், மலர்கள் பெறும் முக்கியத்துவத்தை வேறு எப்பொருளும் பெறவில்லை.

குழந்தையை அரும்பு என்றும் மொட்டு என்றும், இளமை மலர்வு என்றும், முதுமை வாட்டம் என்றெல்லாம் பூக்களோடு தொடர்புபட்ட தமிழன் பண்பாடு, பூவின் பண்பாடாகும்.

ஆனால் இன்று பண்பாட்டை விடமுடியாமலும், நிஜப் பூக்களுக்கு வாய்ப்பு இல்லாமலும் பிளாஸ்ரிப் பூக்கள், மாலைகள், சரங்கள், என்றும் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில் மயக்கி இழுக்கும் நிஜ மல்லிகைத் தோட்டம் எம் காலடியில் வந்து மணம் பரப்புகின்றது என்பது அற்புதமான விடயம் தானே,

வவுனியாவில் புளியங்குளத்தில் அமைந்துள்ள மாதிரிப்பண்ணை மதுரை மல்லிகைத் தோட்டம், மயக்கும் மாலைப் பொழுதில் அங்கு நுழைந்தால் முத்து முத்தாக விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் மல்லிகை மொட்டுக்கள், செடிகளினூடே மொட்டுக்களை ஆய்ந்து கொண்டிருக்கும் இரு பெண்கள், செடிகளுக்கிடையில் இயந்திரத்தால் பண்படுத்திக் கொண்டிருக்கம் ஒருவர், செடிகளோடு பேசிக்கொண்டே கருமமாற்றும் பெரியவர் இவற்றைத் தாண்டி உள்ளே சென்றால் இயற்கை வனப்போடு மரங்கள், தடிகளால் வரித்து வேயப்பட்ட கூரையுடன் கூடிய பெரிய கொட்டகை, அங்கே பெண்கள் இருவர் அவர்களின் விரல்களின் நர்த்தனத்தில் மல்லிகை மொட்டுக்கள் அழகிய பூமாலைகளாக அவதாரம் எடுத்துக் கொண்டிருந்தன.

மல்லிகைத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டே இளைப்பாறக் கூடிய விதமாக நில மட்டத்திலிருந்து சற்று உயரமாக அமைக்கப்பட்ட வட்ட வடிவிலான குடில் மனதிற்கு இரம்மியம் கொடுக்கும் இந்த மல்லிகைத் தோட்டத்தின் சொந்தக்காரர் திரு.தம்பாப்பிள்ளை பிறேமந்திரராஜா துடிப்பும், ஆர்வமும் தன்னம்பிக்கையும் உள்ள உழைப்பாளி, விஞ்ஞானப் பட்டதாரியான இவருக்கு மல்லிகை மீதான மயக்கம் 2015 இல் இந்திய துணைத்தூதுவர் திரு. என். நடராஜானின் சந்திப்பின் பின்னர் ஏற்பட்டுள்ளது.

இந்திய மக்கள் பூக்களோடு உறவாடும் அளவுக்கு இலங்கை மக்களுக்கு வாய்ப்பு

இல்லை என்று கருத்தோடு, அவ்வாய்ப்பை இங்கு ஏற்படுத்தினால் என்ன என்ற அவர் ஆலோசனைக்கு செயல்வடிவம் கொடுக்கத் துணிந்தார். இயல்பாக வேகம் உள்ள இவர் உடனடியாகவே இந்தியாவுக்குச் சென்று மல்லிகை சாகுபடி தொடர்பான நுணுக்கங் களை நேரடியாக அவதானித்தார் தமிழ் நாடு இந்திய வர்த்தக சம்மேளனத்தின் உதவி யோடு முப்பதாயிரம் மல்லிகைச் செடிகளை இலங்கைக்குக் கொண்டு வந்தார்.



இன்று நாளொன்றுக்கு 5kg தொடக்கம் 10kg வரையிலான மலர்கள் கொய்யப்படுகின்றன உள்ளூரிலும், வெளிமாவட்டங்களிலும் சந்தைப்படுத்தப்படும் இம்மலர்கள் 1kg 3000 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படுகின்றன. வைபவங்களின் போது முன்பதிவின் படி மாலைகளாகவும் கொடுக்கப்படுகின்றன. சுற்றுவட்டாரத்திலுள்ள பலருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது. சில காலங்களில் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் இம்மலர்களின் உற்பத்தி இன்னும் விஸ்தரிக்கப்படும் பட்சத்தில் நிறைந்த பயன்களை பலரும் பெற்றுக் கொள்ள முடியும். யாழ் நகர் புன்னாலைக் கட்டுவனில் இதன் கிளையாக ஒரு மல்லிகைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. குண்டு குண்டாக, மெதுவாக மலர்ந்து மெதுவாக வாடும் திறன் கொண்ட மதுரை மல்லிகையை ஏற்கும் மண்வளப்பம் வன்னி மண்ணுக்கும் உரியதாகின்றது.

மேலதிக மலர்களை விரயமாக்காது மாற்று உற்பத்தி வழிகளையும் பரிசீலித்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் இயற்கையோடு இணைந்த மருத்துவம், மன அழுத்தம் தீர்க்கும் வழிகள் பற்றிய புதிய முயற்சிகளையும் திட்டமிட்டு அதை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் பிறேமந்திரராஜா அவர்கள் "செயற்றிறனும் துடிப்பும் உள்ள ஒருவருக்கு கொடுக்கப்படும் ஆலோசனை செயல் வடிவம் பெற்று எல்லோருக்கும் பயன் கொடுக்கும்" என்பதற்கு உதாரணமாக இருக்கிறார்.

மனதுக்கு இதமும் அமைதியும் தருகின்ற இது போன்ற ஏராளமான சுய தொழில் முயற்சிகள் எம்மத்தியில் இருக்கும் போது வேலை கொடு என்று அரசாங்கத்துடன் மல்லுக்கட்டுவதற்கு அவசியமே இல்லாமல் போகின்றது. குறைந்த முதலீட்டுடன் சிறுகத் தொடங்கி, பெருகத் தொடங்க முயற்சி ஒன்று தானே அவசியம்!

ஆகவே மதுரை மல்லிகைத் தோட்டத்திற்கும், திரு.த.பிறேமந்திரராஜா அவர்களுக்கும் ஒரு சபாஷ் போட்டுக்கொண்டு, சுய தொழில் முயற்சிகளில் முனைப்புக் காட்டும் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் கூறிக் கொள்வோம்.

1889 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசில் சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேசத் தொழிலாளர் பாராளு மன்றம் கூடியது. 18 நாடுகளிலிருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்று முடிவு செய்தனர். 1890 மே 1 ஆம் நாள், அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட அறைகூவல் விடுக்கப்பட்டது. இந்த அறைகூவலே, மே முதல் நாள் சர்வதேச தொழிலாளர் தினமாக - மே தினமாக வருவதற்குக் காரணமாக அமைந்தது. அடுத்த ஆண்டிலிருந்து உலக நாடுகள் பலவற்றில் விடுமுறையும் அறிவிக்கப்பட்டது.

மே தினமாக - தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுவதற்கு முன்பே மே முதல் நாளை மக்கள் எப்படி யெல்லாம் கொண்டாடியுள்ளார்கள் என்று தெரிந்து கொள்வோம்.

ஐரோப்பியர்கள் மே தினம் என்பதை அறுவடைத் திருநாளாகக் கொண்டாடியுள்ளார்கள். முந்தைய நாள் இரவு இளை ஞர்கள் கேரல் பாடல்களைப் பாடி மகிழ்ந்துள்ளனர். சில இடங்களில் நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் அழகிப் போட்டியும் நடனமும் நடத்தியுள்ளனர். இளைஞர்கள் ஒரு ஆணையும், ஒரு பெண்ணையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மே தின அரசர், மே தின அரசி என்று பெயர் வைத்து அன்றைய நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக்கியுள்ளனர்.

## உழைப்பாளி

நாலு பேருக்கு நல்லது செய்  
ஊரார் போற்றி மதிக்க  
உழைப்பாலே உயர்ந்து  
உலகை வென்றிடும் அறிவாளி

தான் செய்யும் வேலையை நேசித்து  
தன்னை நம்பியே நின்று  
பிறருக்காய் தன்னை  
மெழுகாய் உருக்கும் தொழிலாளி

ஒன்றுபட்டு உழைத்து  
ஓடும் நதி போல் ஓடி  
பேதமின்றி எந்த வேலையும்  
செய்யும் உழைப்பாளி

நெற்றி வியர்வை சிந்தி  
ஓயாமல் கண் சாயமல்  
வானம் வாழும் காலம் வரை  
வாழ்வான் தொழிலாளி

செ.சஜித்ரா  
வவுனியா

பசுமையின் விழாவாகவும் இளைஞர்கள் மே தினத்தைக் கொண்டாடியுள்ளார்கள். சில நாடுகளில் கோடைக் காலம், இளவேனிற் காலத்தை வெற்றிகண்ட விழாவாகவும் கொண்டாடி மகிழ்ந்துள்ளார்கள். இப்படி, விழாக்களாகக் கொண்டாடும் வழக்கம் எப்போது எப்படித் தோன்றியது என்பது தெரியவில்லை. இது, நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும்

வெளிப்படுத்தும் விழாவாகக் கொண்டாடி யதுபோல் தெரிகிறது. சிலர் இதனை, பண்டைய கால எகிப்திலும் இந்தியாவிலும் கொண்டாடப்பட்ட வசந்த கால விழாக்களுடன் தொடர்புபடுத்துகின்றனர். ரோமர்களால் வெற்றி கொள்ளப்பட்ட ஆங்கிலேயரும் மற்றவர்களும் ரோமர் திருவிழாவான புளோராலியாவிலிருந்து மே தினத்தை உருவாக்கினர். பிரான்ஸ் நாட்டில் மேதினம் சமய உணர்வோடு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வசந்தத்தின் வருகையை இளைஞர்கள் நடனமாடிக் கொண்டாடியதோடு பரிசுப் பொருட்களைக் கொடுத்தும் மகிழ்ந்துள்ளனர். இப்படி, பல கதைகள் மே தினம் என்பதற்கு இருப்பினும், இன்று தொழிலாளர் தினம் என்றே அனைத்து மக்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. கிறிஸ்தவத் திருச்சபைகள் மே தினத்தைக் கொண்டாடுவதில்லை என்ற கருத்து நிலவுகிறது. ஆனால், முதல் கிறிஸ்தவச் சபையான கத்தோலிக்கத் திருச்சபைத் திருக்குடும்பத்தில் தொழிலாளியான சூசையப்பரின் (ஜோசப்) விழாவாக மே தினம் பின்பற்றப்பட்டு வருகிறது.

வசந்த கால விழா என்று கூறினாலும், வசந்த காலத்தைத் தங்கள் வியர்வையால் உருவாக்கும் தொழிலாளர் விழா என்று சொன்னாலும் மே தினம் மகிழ்ச்சிக்குரிய விழாவாகவே கொண்டாடப்பட்டு வருகிறது.



- அஸ்ரா

## ஓவியத்திற்கான கவிதை

சித்திரையின் புத்தாண்டே
பூத்தபடி வருக
சித்தியெல்லாம் சேர்ந்து வர
சீக்கிரமே வருக
எத்திசையும் சாந்தி அருள்
சிந்திவிட வருக
புத்துணர்வு பொலிவுதர
புன்னகையில் வருக

## சோம்பேறிப் புத்தி



படிப்பு அறிவு தரும்
அறிவு பணம் தரும்
பணம் திமிரை தரும்
திமிரு ஆணவம் தரும்
ஆணவம் அழிவை தரும்
அதனால்

படிப்பை எதிர்ப்போம்
ரெஸ்ட் எடுப்போம்

# வளர்ந்தோர் கற்றல்

அருந்ததி இரவீந்திரன்



மனித விருத்தியில் பல்வேறு பருவங்களை விருத்தி உளவியல் கவனத்தில் கொள்கிறது. இப்பருவங்கள் உயிரியல் காரணிகள், அறிகை சார் காரணிகள், உளவியல் சார் காரணிகள், சமூகம் சார் காரணிகள், மனவெழுச்சி சார் காரணிகள், ஒழுக்கம் சார் காரணிகள் என்பவற்றின் அடிப்படையில் தீமானிக்கப்படுகின்றது.

வளர்ந்த கற்பவர்களை அடையாளப்படுத்தும் முதல் உயிரியல் காரணி வயது ஆகும். எனவே ஒவ்வொரு இனங்களின் கலாசாரப் பின்னணியையும் பொறுத்து பருவங்களாக வளர்ந்த கற்பவர்களை அடையாளப்படுத்தலாம்.

இங்கு வளர்ந்தோர் எனக் குறிப்பிடப்படுவோர் பெரும்பாலும் 19 வயதைக் கடந்த உயிரியல் வயதைக் கடந்தவர்கள் இதற்குள் அடக்கப்படுகின்றனர். பெரும்பாலும் இலங்கையில் க.பொ.த சாதாரண வகுப்பைப் பூர்த்தி செய்து தொடர்ந்து உயர் கல்வியைக் கற்போர்கள் பெரும்பாலும் 22வயதிற்கு மேற்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

வளர்ந்தோர் கற்றலை நோக்கும் போது இது முறைசார்ந்த ரீதியிலும், முறைசாரா ரீதியிலும் முறைமையில் ரீதியிலும் நடைபெறுகின்றது. ஆயுள் முழுக்கக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை மையமாகக் கொண்டு சகல நாடுகளிலும் வளர்ந்தோர் கற்றல் முன்னெடுக்கப்படுகின்றது.

வளர்ந்தோர் கற்றல் பெரும்பாலும் சுய தங்கியிருப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இளையோர் கற்றலுடன் ஒப்பிடும் போது சுய இயக்கம், அனுபவத் திரளமைப்பு, தேடிக்கற்றல், சுயஊக்கல், வாழ்க்கை நடைமுறையுடன் இயைந்து கற்றல், பொருத்தமானதைக் கற்றல் போன்ற சிறப்பியல்புகள் வளர்ந்தோர் கற்றலில் காணப்படுகின்றன.

மேலும் கற்கும் விடயத்தைத் தெரிவு செய்தல், கற்கும் இலக்கைத் தெரிவு

செய்தல், கற்கும் இடத்தைத் தெரிவு செய்தல், கற்றல் மூலங்களைத் தெரிவு செய்தல், கற்பதற்கான நேரத்தை முகாமைத்துவம் செய்தல் என்பன வளர்ந்தோர் கற்றலில் தனித்துவமுடையதாகக் காணப்படுகின்றது.

மல்கொம் நொவல்ஸ் என்பவரினால் இனங்காணப்பட்ட வளர்ந்த கற்பவர்களின் குணவியல்புகள்

சுய கருத்து Self-concept

ஒரு வளர்ந்த மனிதரது சுய கருத்தானது அவரது ஆளுமையில் தங்கியிருக்கும் அது மனிதத் தன்மையினைச் சார்ந்தது.

வளர்ந்தோர் கற்பது அனுபவத்தில். :- Adult Learner Experience

முதிர்ந்த மனிதனது கற்றல் அனுபவவாயிலாக இடம் பெறும். அனுபவமே அவருக்கு சிறந்த பாடமாக அமையும். அதாவது நீண்ட காலமாக சேகரிக்கப்பட்ட அனுபவங்கள் கற்றலுக்கு செழிப்பான வளமாக அமைகின்றது.

கற்றலுக்கு தயார் நிலையில் இருத்தல். :- Readiness to Learn

வளர்ந்த ஒருவரது தொழில் இலக்கு மற்றும் சமூகப் பாங்கு என்பன அவரை கற்றலுக்கு தயார் நிலையில் வைத்திருக்கும்.

கற்றலுக்காக திசைமுகம். :- Orientation to Learning

ஒருவர் கற்றல் நேர் மனப்பாங்கினை வளர்ப்பதற்கும், சரியாக பிரச்சினைகளை அடையாளம் காணவும் அவருக்கு வழிகாட்டல் அவசியமாகின்றது.

கற்றலுக்கான ஊக்கம். :- Motivation to Learn ஒரு வளர்ந்த மனிதனது கற்றலுக்கு உள்ளக ரீதியான ஊக்கப்படுத்தல் இருத்தல் வேண்டும். அதாவது உள்ளார்ந்த ஊக்கல் காணப்படுதல்

வளர்ந்தோர் கற்றலின் குணவியல்புகள் தொடர்பாக மல்கம் நொவல்ஸ் பின்வருமாறு கூறுகின்றார். இவர் இளையோர்களின் கற்றலை Pedagogy எனவும் வளர்ந்தோரின் கற்றலை Andragogy எனவும் குறிப்பிடுகின்றார். இவரது இப்பிரிவானது இளையோர்கள் கற்றலில் தங்கியிருப்பவர்களாகவும் வளர்ந்தோர்கள் கற்றலை சுயமாக மேற்கொள்பவர்களாகவும் பிரித்துக்காட்டு கின்றார்.

ஜீன் பியாஜேயின் ஆய்வின்படி வளர்ந்தோர் எனப்படுவோர் சிந்தனை விருத்தியில் உயர்நிலை என்கிறார்.

கோல்ப் என்பவர் விருத்தி செய்த "அனுபவக் கற்றல் வட்டம்" கல்வியின் அடிப்படையாக நூல் அனுபவங்கள் வலிறுத்தப்பட்ட போதிலும் கற்றல் என்பது வேறு முனைகளிலிருந்தும் ஆரம்பமாகலாம் என்கிறார்.

அடுத்து ரீகல் என்பவர் எண்ணங்களின் தர்க்கரீதியான தொழிற்படு கட்டம்

ஆரம்பிக்கும் வயது என்கிறார். இது சிந்தனையின் திறந்த சிந்தனையும் விரிசிந்தனையும் கொண்ட மிக உயர்கட்டம் என்று குறிப்பிகின்றார்.

இந்த அடிப்படையில் பின்வரும் சில குணவியல்புகள் வளர்ந்த கற்போரின் பொதுவான இயல்புகளாக காணப்படும் .

தனது உண்மையான ஆற்றலை வெளிக்காட்டி சிறப்பாக ஆர்வத்துடன் கற்பார்.

தமது எண்ணங்கள் உணர்வுகளை சகபாடிகளிடம் பகிர்ந்து கொள்வார்.

ஆக்க மலர்ச்சி கொண்ட கற்பனை கொண்டவராக காணப்படுவார்.

பிரச்சினைகள் மீது அதீத உணர்ச்சித் துலங்கலைக் காட்டுவார்.

ஒரு விடயத்தை விபரித்து விரிவாக்கும் ஆற்றலை மேற்கொள்வார்.

சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கற்றலை மேற்கொள்வார்.

காரணங்களையும் விளைவுகளையும் ஊகித்தறியச் செய்யும் வினாக்களைக் கொண்டு கற்க முற்படுவார்.

பல்வேறு விடயங்களை ஒரே நேரத்தில் கற்க வேண்டும் என சிந்தித்து செயற்படுவார்.

குழுச்செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வமுடையவர்.

பரந்த மனப்பாங்குடன் செயற்படுவார்.

நேர முகாமைத்துவத்தை கடைபிடித்து ஒழுகுவதில் அக்கறை காட்டுவார்.


கற்றலை தமது தொழில் நோக்கியதாகவும், வருமானம் நோக்கியதாகவும் உறுதிப்படுத்திக் கொள்வார்.

புதுமை மீது உற்சாகம் காட்டுவார்.

ஓரிடத்திலிந்து இன்னோரிடத்திற்கு எண்ணங்களையும் கருத்துக்களையும் இடம் மாற்றக்கூடிய ஆற்றல் கொண்டவராக காணப்படுவார்.

கருத்துப் பயமின்மை, தெரியாதவற்றை நோக்கிய கவர்ச்சி, புதிர்கள், மற்றும் விளங்காதவற்றின் மீது விருப்பம் கொண்டு கற்பவ ராக காணப்படுவார்.

தமது திறன்களை மற்றவர்களின் தலையீடின்றித் தாமாகவே வளர்த்துக் கொள்ள முன்வருவார்.



வேலைக்கு தினமும் அரை மணி முக்கால்மணி லேட்டாவே வரீங்களே ... ஏன்? நீங்கதானே, வேலையின்னு வந்துட்டா டைம் பார்க்க கூடாது ன்னு சொன்னீங்க

# முற்றத்து மல்லிகை



## பி.ஏ.சி.ஆனந்தராஜா

நாடகக் கலைஞர், உளவளத்துணையாளர்

நேர்கண்டவர்:
அ.அன்ரனிகுரூஸ்

முதுமையின் சுவடுகளை விரட்டிக் கொண்டிருக்கும் புன்னகை தவழும் உதடுகள், கூர்மையான பார்வை, ஆங்கிலம் குழைத்த நகைச்சுவை உரையாடல், அழகான வயோதிபம், அவர்தான் நாடகக்கலைச் செல்வர் பி.ஏ.சி. ஆனந்தராஜா அவர்கள்.

நாடகக் கலையின்பால் ஈர்க்கப்பட்டு அதற்குள்ளேயே வாழ்ந்து புடமிடப்பட்டு மெருகேறிய மனிதன். கூடவே இருந்து அவரின் இன்ப துன்பங்களிலெல்லாம் பங்கேற்கும் ஓய்வு பெற்ற ஆசிரியையான அவர் மனைவி, வந்தவரை ஓடியோடி உபசரிக்கும் அழகான இல்லறம் .

இறம்பைக்குளம் கொறவப்பொத்தானை வீதியில், வீதியை ஒட்டியதாக அமைந்திருக்கும் இல்லம். அந்தக்காலத்து இறம்பைக்குளத்து வீதியில் ஒன்றிரண்டு மாட்டுவண்டில்களே செல்லும், காலையில் இந்த வீதியில் இருக்கும் ஒரு சில குடும்பங்கள் வண்டியில் செல்வோம் என்கிறார். அந்தக்காலத்து வண்டில் இந்தக்காலத்துக் காருக்குச் சமானம்தானே எங்கே சென்றீர்கள் என்றபோது "வயலுக்குத்தான்" என்று கூறிவிட்டுச் சிரிக்கிறார். பசுமையான அந்த வாழ்க்கையின் சுவடுகள் அவருள்ளே புளங்காகிதத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றன.

வேந்தக்கோன் முதலியாரின் நாடகத்திறமையும், பாடல்பாடும் திறமையும் அவர் பேரனாரான ஆனந்தராஜா அவர்களையும் சிறுவயது முதலே ஈர்த்துக் கொண்டது. இருவரும் சேர்த்து தியாக ராஜா பாகவதர் பி.யூ.சின்னப்பா போன்றவர்களின் பாடல்களைப் பாடி மகிழ்வர். இது இவரின் பாடல், நாடகக் கலையார்வத்தைத் தூண்டியும் விட்டது.




அவர் கல்வி கற்ற இறம்பைக்குளம் அந்தோனியார் பாடசாலையும் (தற் போது இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்) பின்னர் கல்விபயின்ற

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, அனுராதபுரம், புனித சூசையப்பர் கல்லூரி போன்றன இவரின் நாடகப் பசிக்குத் தீனி போட்ட இடங்களாக இருந்தன. படிக்கும் காலத்திலேயே நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து, நடித்து தன்னை வளர்த்துக் கொண்டுள்ளார்.

உயர்கல்விக்காக 1958 இல் இந்தியா சென்ற போதும், பின்னர் 1963 இல் விஞ்ஞானப்பட்டதாரியாக இளவாலை சென்ஹென்றிஸ் இல் விஞ்ஞானப்பாட ஆசிரியராகப் பணியில் அமர்ந்த போதும் நாடகத்துறை ஒன்றுதான் அவருள்ளே உயிர் நாடியாக அமைந்திருந்தது. இந்தியாவில் கற்றபோது அவரின் பரந்த வாசிப்பு ஆர்வம் ஷேக்ஸ்பியர், பெர்ணாட்ஷா, போன்ற நாடக மேதைகளின் ஆக்கங்களை அணுவணுவாகப் படிக்கத் தூண்டியது. வாசிப்பது மட்டுமல்லாமல் அவற்றை நெறியாளனாக செய்யவும் நடிக்கவும் செய்தார்.

ஒத்தெல்லோ (Othello) ஹம்லெட் (Hamlet) ஜூலியஸ்சீசர் (Juliuscesar) என்பவற்றின் பிரதான காட்சிகளை தமிழில் கைக்குட்டை, எலிப்பொறி, சூழ்ச்சி , அழையா விருந்தினர் என நாடகங்களாக்கினார்.

1969 இல் பேராசிரியர் வித்தியானந்தன் , கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோர் தலைமை தாக்கிய கலைக்கழகப் போட்டிக்கு நாடகங்களைப் பழக்கிப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டார்.

இந்திய நாடகவியலாளர் பாதல் சர்க்காரின் ஊர்வலங்கள் (Profession) இலங்கை ஆங்கில எழுத்தாளர் தியாகராஜா அரசநாயகத்தின் The Intruder நாடகத்தைத் தமிழ்ப்படுத்தினார்.

ரஷ்ய நாடக எழுத்தாளர் அன்ரன் செங்கோவின் தாக்கத்தில் ரோசா மலர்கள், பாரதியாரின் பின்புலத்தில் தரிசனம், ஆகியவற்றையும், படைத்தார் நாடகத்துறை தொர்பாக அவரின் தேடல் இவ்வாறான படைப்புருவாக் கங்களுக்கு காரணமாக இருந்தன.

தான் பின்பற்றும் கிறிஸ்தவமதம் சார்ந்த நாடகங்களையும் எழுதி நெறியாள்கை செய்தார். நாடோடி, பாத காணிக்கை, புரட்சிக்குள் ஒருபாதை, ஜெருசல யாத்திரை, இதயத்திலிடம், உயிர்த்த உள்ளங்கள் என்பன அவற்றுள் ஒரு சிலவாகும் அத்துடன் காங்கேசன் துறையில் முதன்முதலாக யேசுவின் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றிப் புகழடைந்தார்.

இதுமட்டுமல்லாமல் சிறுவர் நாடகங்களைத் தயாரிப்பதிலும் கைதேர்ந்து விளங்கினார். யானையும் சிட்டுக்குருவியும், பாப்பா யானை வீரனல்லோ, கற்பனைச் சுவர் என்பன அவற்றுள் ஒரு சிலவாகும்.

சமூக, இலக்கிய, சமய, சிறுவர் சார்ந்த நாடகங்களைத் தயாரித்தும், மொழிபெயர்ப்புகளை மேற்கொண்டும் இருந்த நிலையில் நாடகக் கலைஞர் தார்சீயஸ் அவர்களின் சந்திப்பின் பின் புதிய பாதைகிடைத்ததாக கூறும் இவர்

நாடக அரகக் கல்லூரியில் இணைந்து புதிய நாடக வடிவங்களை எழுதினார். அவற்றுள் "இருட்டினில் குருட்டாட்டம்" பேசப்படும் நாடகமாக அமைந்தது.

1977 இல் புதிய கல்விச் சீர்திருத்தம் அமுல்படுத்தப்பட்ட போது முதன்முதலாக இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் தான் நாடகமும் அரங்கிலும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது ஆனந்தராஜா அவர்களுக்கு நாடகத்துறையில் கிடைத்த அங்கீகாரமாகும். இவ் வாய்ப்பபை பயன்படுத்தி தனது மாணவர்களைப் பட்டை தீட்டினார். அவரது ஆசிரியப்பணியானது மாணவச் செல்வங்களையும் இத்துறையில் புடமிட ஏதுவாக இருந்தது.

நாடகக் கலைஞராக வலம் வந்த ஆனந்தராஜா அவர்களுக்கு இன்னொரு முகமும் உள்ளது. அது உளவளத்துணையாளர் என்னும் உன்னத பணிசார்ந்தது.


1988 இல் ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் உளவளத்துணைத் துறையில் பயிற்சி பெற்று சாந்தியகம் என்னும் உளவளத்துணை நிறுவனத்தில் உளவளத்துணையாளராக இணைந்து பின்பு அதன் பணிப்பாளராகினார். அதைத் தொடர்ந்து 1995 இல் இருந்து வவுனியாவில் மனோசாந்தி என்னும் அமைப்பின்மூலம் ஆற்றுப்படுத்தல் பணியைத் தொடர்ந்தும் செய்து வருகின்றார்.

யாழ்நகர் இடப்பெயர்வில் அவரது ஏராளமான படைப்புக்கள் இல்லாமல் போனதைத் துயரத்துடன் குறிப்பிடும் அவர் நாடகம், உளவளத்துணை சார்ந்து இருட்டினில் குருட்டாட்டம், அன்புக்கரங்கள், நமக்கு நாம், விடியலின் கீதம் எனும் நூல்களைப் படைத்துள்ளார்.

இயலாமை தொட்டுக் கொண்டிருக்கும் போதும் கூட தன்னால் கைத்தடி இன்றி நடக்கமுடியும் என்று வீரம் காட்டி நடந்ததையும், விழுந்ததையும் நாடகப் பாணியில் அங்க அசைவுடன் கூறிச் சிரிக்கும் இந்த தைரியமான மனிதனை, "நான் அந்தக் காலத்தில் வடிவு, இப்பவும் அப்படித்தானே" என்று கண்சிமிட்டிக் கேட்கும் நகைச்சுவை உணர்வும் கொண்ட எங்கள் வீட்டின் முற்றத்து மல்லிகையான ஆனந்தராஜா அவர்கள் இன்னும் நிறைவான ஆலோசனை வழிகாட்டல்களையும், உளவளத்துணைப் பணிகளையும் ஆற்றி மணம் பரப்ப வேண்டி உளமார வாழ்த்துகின்றோம்.



புரியுது... நீங்க சொல்றது புரியுது...
உங்க வெயிட் நார்மலாத்தான் இருக்கு..!
ஆனா இந்த வெயிட்டுக்கு இன்னும் நீங்க
மூணு அடி வளரணும்...
கொஞ்சம் குட்டையா இருக்கிங்க.



# அன்னையர் தினம் உருவானது எப்படி?

ஈரைந்து மாதங்கள் எம்மை சுமந்து ஈன்றெடுத்த அன்னைக்கு பெருமை சேர்க்கும் உன்னத நாள் இது.

தமது குழந்தைகளுக்காக எவ்வளவு கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு கள்ளமில்லாமல் அன்பு காட்டுவதே நமது அம்மா.

தனது பிள்ளைகளுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் தாயின் மகத்துவத்துவத்திற்கு மதிப்பளிக்கும் முகமாகவே இந்த அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த அன்னையர் தினம் பண்டைய காலத்திலிருந்தே கொண்டாடப்பட்டு வருவதற்கான சான்றுகள் பல உள்ளன. அந்த வகையில், வசந்த காலத்தின் துவக்கத்தை கிரேக்கர்கள் கொண்டாடிய போது அந்த கொண்டாட்டத்தில் தாய் தெய்வத்தை வணங்குவதையும் ஓர் அங்கமாக கொண்டிருந்தனர்.

அவர்கள் க்ரோனஸின் மனைவி ரேஹாவை தாய் தெய்வமாக வழிபட்டு வந்தார்கள். அதே போன்று ரோமர்களும் வசந்த கால கொண்டாட்டத்தின் போது தாய் தெய்வத்தை வணங்குவதையும் அவருக்கு மரியாதை செய்வதையும் வழக்கமாக கொண்டிருந்தனர்.

இவ்வாறு பண்டைய வரலாற்றின் பின்னணியே அன்னையர் தினம் தோன்றுவதற்கு வித்திட்டது என கூறப்படுகிறது.

இருப்பினும் இந்த அன்னையர் தினம் தோன்றுவதற்கு காரணமாக இருந்தவர் அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினியா மாநிலத்தில் கிராப்டன் (GRAFTON) என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்த ஜார்விஸ் என்பவரேயாவார்.

இவர் அமெரிக்காவில் நடந்த யுத்தமொன்றில் பலியாகிய அமெரிக்க வீரர்களின் குடும்பங்களின் நல்வாழ்க்கைக்காக தன்னை அர்ப்பணித்து அதற்காகவே பாடுபட்டு 1904 இல் உயிர்நீத்தார்

இந்த நிலையில் இவரது மகளான அனா ஜார்விஸ் (AnnaJarvis) தனது தாயின் நினைவாக மே மாதத்தில் ஓர் ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பு வழிபாட்டினை நடத்தினார்.

இதைத் தொடர்ந்து தன் தாயாரின் நினைவாகவும், தத்தம் வீடுகளின் அவரவர் அன்னையர்களும் கௌரவிக்கப் படவேண்டும் என்ற தன்னுடைய எண்ணத்தை பென்சில் வேனியா மாநில அரசுக்குத் தெரிவித்தார். அரசும் அவர் கருத்தை ஏற்று 1913ஆம் ஆண்டு முதல் அன்னையர் தினம் என அங்கீகரித்து அறிவித்தது.

இருந்தும் இதில் திருப்தியடையாத அவர் அமெரிக்கா முழுவதும் இந்த அன்னையர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதிக்கும் இதே வேண்டு கோளை விடுத்தார்.

இந்த கோரிக்கையின் நியாயத்தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்த அன்றைய அமெரிக்காவின் ஜனாதிபதி வுட்ரோ வில்சன் 1914 ஆம் ஆண்டு தொடக்கம் வருடம்தோறும் மேமாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கி ழமையை அதிகாரபூர்வமாக அன்னையர் தினமாகவும், அன்றைய நாளை விடுமுறை தினமாகவும் அறிவித்தார்.

எமக்கு தூய்மையான அன்பை தரும் அன்னையர்களை மகிழ்விப்பதற்காகவும் அவர்களது மகத்துவத்தையும் பெருமை யையும் உலகறியச் செய்யும் வகையில் தற்போது அன்னையர் தினம் பரவலாக உலகின் பல நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

## அறியாமை

அன்பின் வலிமையையும்
அற்பர்கள் அறி யார்.
நட்பின் பெருமையை
நீசர்கள் புரியார்.
பாசத்தின் உன்னதத்தை
உன்மத்தர்கள் உணரார்.
சகோதரத்துவத்தின் மகிமையை
சண்டாளர் சுவையார்.
மனித மாண்பின் மகத்துவத்தை
மூடர்கள் மதியார்.
அறத்தின் அ ருமையை
அற்பர்கள் ஆதரியார்.
செல்வந்தனோ,
அதிகாரம் படைத்தவனோ,
ஆணவக்காரனோ,
ஆண்டவனைக்கூட
அவமதிப்பான்.
ஏழை,எளியவர்
அயலவனில்
ஆண்டவனைக்
காண்பார்.
புண்ணியங்கள்
சேர்ப்பார்.

**மி.கூசைதாசன்**

# குட்டிக்கவி 02



வீதி விபத்து

இனிய வாசகர்களே!
ஒவ்வொரு இதழிலும் குட்டிக்கவி யாக வரும் படத்திற்கு பத்து வரிகளில் குட்டிக்கவிதையொன்றை எழுதி எமது வழமையான முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள். தொடர்ந்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும்.

**சென்ற இதழின் "தற்கொலை" என்ற நிழற்படத்திற்கு கிடைத்த குட்டிக்கவி**



அம்மா என்றேன்
அரவணைக்க யாருமில்லை
பள்ளிக்கு சென்றேன்
பணமின்றி சீற்றில்லை
உழைக்கச் சென்றேன்
உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லை
காதலுக்காய் ஏங்கினேன்
காதலனும் கிடைக்கவில்லை
கவலையை போக்க நினைத்தேன்
கண்ணீரும் கண்ணில் வரவில்லை
நடைபிணமாய் திரிந்த எனக்கு
நான் கொடுத்த அடைக்கலம் தற்கொலை

**யோகநாதர் ஹர்சாந்தனிமேரி**

# நட்பு

உங்களுக்குத் தெரியுமா
உங்கள் விழிகள் இரண்டிற்கும்
உள்ள ஒற்றுமையை

ஒன்றாக சிமிட்டும்
ஒன்றாக நகரும்
ஒன்றாக அழும்
ஒன்றாக பார்க்கும்
இவ்வளவிற்கும் அவை
ஒன்றையொன்று
பார்த்ததில்லை

நட்பு என்பதும் இது போன்றே
நட்பு இல்லையெனில் வாழ்க்கை
வெறுமையாகிவிடும்

Company Reg No:
PV-115312

# Thangamz

## Engineering (Pvt) Ltd

thangamzengneering@gmail.com
Tel: 077 8084164




27, Main Street, Cheddikulam, Vavuniya.



# WORLD EXPRESS SERVICES

WES
World • Express • Services

INTERNATIONAL LOCAL COURIER SERVICE

குறைந்த செலவில் துரித கதியில் உங்கள் உறவினர் நண்பர்களுக்கு பரிசுப் பொருட்களையும் பொதிகளையும் அனுப்பிவைக்க எங்களை நாடுங்கள்

**எமது சேவையின் சிறப்பியல்புகள்**

விரைவானதும் துரிதமானதுமான Door to Door சேவைகள்.

எந்தவொரு நாட்டுக்கும் 3 அல்லது 4 வேலைநாட்களில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்

தேவையேற்படின் உங்கள் இடங்களுக்கே வந்து பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும்

யாழ் மற்றும் அனைத்து உள்நாட்டுப் பிரதேசங்களுக்கும் துரித கதியிலான சேவை




இல:180/5, புகையிரதநிலையவீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா. 024 4903200 / 024 4928455

Head Office: No:338, Aluth Mawatha Road, Colombo 15. Tel: 0112 520 894 / 0114 345 966

## OUR BRANCHES

| Kotahena: | Negombo: | Batticaloa: | Jaffna: |
|---|---|---|---|
| No:42, Kotahena Street, Colombo 13, Tel: 011 24 24 221 | No: 95,Sea Street, Negambo, Tel: 031 222 4544 031 493 6899 | No:419,Trinco Road,Batticaloa. Tel: 065 2228 995 065 4927 477 | No: 295, Palali Road,Jaffna. Tel: 021 2220 356 021 4923 677 |

**Hotline: 0773 870 952 / 0114 640 650**